விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 01 வியாழக்கிழமை (17.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 273

### நிபந்தனைகளை கைவிட்டு

## விக்னேஸ்வரனுக்கு எதிரான வழக்கை வாபஸ் பெற்றார் டெனீஸ்வரன்

(கொழும்பு)

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகத் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எந்தவித நிபந்தனையுமின்றி முடித்துக் கொள்வதாக பா.டெனீஸ்வரன் தரப்பில் தெரிவிக்கப்பட்டதையடுத்து வழக்கு முடிவுக்கு வந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று இரண்டாவது நாளாக வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, டெனீஸ்வரன் தரப்பில் வழக்கை வாபஸ் பெறப் போவதாக அறிவிக்கப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மனுதாரான முன்னாள் வட மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ, வழக்கை தொடர்ந்தும் நடத்த விரும்பவில்லை என கூறினார்.

இதன்போது சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் அனந்தி சசிதரன் ஆகியோர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான 23





### வழக்கு தொடர்பில் மனம் வருந்துகிறேன்

## விக்னேஸ்வரன் மீதான வழக்கு தொடர்பில் டெனீஸ்வரன் தெரிவிப்பு

23ஆம் பக்கம் பார்க்க

### "இது ஒரு துன்பியல் சம்பவம்"

## டெனீஸ்வரனுடனான வழக்கு குறித்து நீதியரசர் விக்னேஸ்வரன்

23ஆம் பக்கம் பார்க்க



### – வெடுக்குநாறி ஆலயத்தில் –

## வழிபாடு நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி

(வவுனியா)

ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் திருவிழா நிகழ்வினை நடத்துவதற்கு பொலிஸாரால் கோரப்பட்ட தடை உத்தரவு விணணப்பத்தை வவுனியா நீதவான் நீதிமன்றம் நிராகரித்து உத்தர விட்டுள்ளது.

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறி 24

## எச்சரிக்கையின் பின் சிவாஜிலிங்கம் விடுதலை

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் நினைவு தினம் அனுஷ்டித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிவாஜிலிங்கம் யாழ்.நீதிமன்றினால் கடும் எச்சரிக்கையின் பின் 23



### இலங்கையின் செயற்பாட்டில்

# நம்பிக்கை ஏற்படவில்லை

### பிரிட்டன் மனித உரிமைகளுக்கான தூதுவர் ரீட்டா பிரென்ஞ் தெரிவிப்பு

(ஜெனிவா)

இலங்கையின் உள்நாட்டு நல்லிணக்க செயற்பாடுகளில் தமக்கு நம்பிக்கை ஏற்படவில்லை என்று பிரிட்டன் மனித உரிமை விவகாரங்களுக்கான தூதுவர் ரீட்டா பிரென்ஞ் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



### விபத்தில் படுகாயமடைந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியைக் கடந்தபோது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு 23

### ஜனாதிபதி, பிரதமரின் பெயரைக் குறிப்பிட்டால்

## பாடசாலைகளில் மாணவர்களை இணைத்துக் கொள்ள வேண்டாம்

### ஜனாதிபதி பாடசாலை அதிபர்களுக்கு பணிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் உயர் அரச அதிகாரிகளின் பெயர்களை குறிப்பிட்டு பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளுமாறு முன்வைக்கப்படும் வேண்டுகோள்களை தயங்காது நிராகரிக்குமாறு அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின், 23

### முள்ளிவாய்க்காலில் ஒரு தொகை வெடிபொருட்கள் நேற்று மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த தனியார் காணியொன்றி 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலை ஆட்கள் தேவை

புன்னாலைக்கட்டுவன் வடக்கில் இயங்கி வரும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் உற்பத்தி நிலையத்திற்கு பெண் வேலை ஆட்கள் தேவை.
ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
அருகாமையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (C-336)

**077 557 7750**

## நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை உடைத்து திருட்டு

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை உடைத்து அதில் வைக்கப்பட்டிருந்த பணப்பை மற்றும் பொருட்கள் திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை மதியம் சுன்னாகம் சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

பட்டப்பகலில் ஆள் நடமாட்டம் உள்ள இடத்தில் நடைபெற்ற இச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிசில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி ( வெளிவாரி )

1. இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2018
2. மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2018

மேற்படி பரீட்சைகளினை 01.10.2020 (வியாழக்கிழமை) தொடக்கம் 11.10.2020 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 28.09.2020 (திங்கட்கிழமை) தொடக்கம் 30.09.2020 (புதன்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**16.09.2020** (C-334)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 24 . 06 . 1947

இறைவன் நிழலில் 20 . 08 . 2020



அமரர்
## தம்பையா யோகராசா
( Retired Senior Aeronautical Communication Officer Ratmalana, Katunayaka Airport, Sri Lanka )

கடந்த 20.08.2020 அன்று சிவபதமடைந்த எம் குடும்ப அகல்விளக்கு அமரர் தம்பையா யோகராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (19.09.2020) சனிக் கிழமை இல. 92, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத் தில் இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து சுன்னாகம் கதிரமலை சிவன் கோயில் திருமண மண்டபத்தில் மு.ப 11.30 மணியளவில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதன் பின்னர் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(C-335)

" தேவி வாசா "
92, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். Tel : 021 224 0267

மனைவி, பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.
Tel : 076 565 8831

### பயங்கரவாத தடுப்பு பிரிவினரால்
## காணாமல் போனோரின் சங்க இணைப்பாளர் விசாரணைக்கு அழைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க இணைப்பாளர் மரியசுரேஷ் ஈஸ்வரிக்கு பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக கடந்த 2017ம் ஆண்டு மூன்றாம் மாதம் 8 ஆம் திகதியிலிருந்து தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் குறித்த விடயம் தொடர்பில் மரியசுரேஷ் ஈஸ்வரியை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு கொழும்புக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தபோது அவர் தன்னுடைய குடும்ப நிலைமை காரணமாக கொழும்பு வர முடியாது என மறுப்பு தெரிவித்திருக்கிறார். இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சம்மதம் தெரிவித்ததன் அடிப்படையில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் ஊடாக அவருக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நேற்று மாலை 2 மணிக்கு முல்லைத்தீவு தலைமை பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு சமுகமளிக்குமாறு அவரிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது . (ம- 03, 281)

## மாநகர சபையின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வண்ணார்பண்ணை பிரிவில் காங்கேசன்துறை வீதிக்கு அண்மையாக தட்டாதெருச்சந்திக்கும் அரசடிச்சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் தாய் சேய் ஆரம்ப சுகாதார சிகிச்சை நிலையம் நடத்துவதற்கு வீடு ஒன்று தேவையாக உள்ளது. வீடு வாடகைக்கு தர விரும்புபவர்கள் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தொலைபேசி இலக்கம் 021 222 2645 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ் மாநகரசபை. (ம-03)

## யாழ். வணிகர் கழக புதிய நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் சனிக்கிழமை வணிகர் கழக பணிமனையில் நடைபெற்றது. இதன் போது புதிய நிர்வாகசபை தெரிவும் இடம்பெற்றது.

இதன்போது யாழ். வணிகர் கழகத் தலைவராக இ. ஜெயசேகரனும், உப தலைவராக ச. சிவகுமாரனும், செயலாளராக ச. சிவலோகேசனும், உபசெயலாளராக ந. ஜெகமோகனும், பொருளாளராக சு. சுதர்சனும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதுடன் மேலும் 14 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவாகினர். (ம-03)

NSB

## பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 31.07.2019 இற்கு முன்பு அடகுவைக்கப்பட்டு கீழ்க் குறிப்பிடப்படும் திகதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 10.10.2020 தொடக்கம் 18.10.2020 வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

| கிளை | | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவுத் திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 1. | முல்லைத்தீவு, மல்லாவி | 08.10.2020 | 10.10.2020 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 2. | கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி | 08.10.2020 | 10.10.2020 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 3. | சுன்னாகம், காரைநகர், சங்கானை, மானிப்பாய் | 08.10.2020 | 11.10.2020 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 4. | வவுனியா | 08.10.2020 | 11.10.2020 | தேசிய சேமிப்பு வங்கி வவுனியா |
| 5. | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை | 15.10.2020 | 17.10.2020 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 6. | மன்னார், வங்காலை | 15.10.2020 | 17.10.2020 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 7. | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் 2ஆம் கிளை, ஊர்காவற்றுறை, திருநெல்வேலி, கோப்பாய். | 15.10.2020 | 18.10.2020 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |

ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

வடபிராந்திய முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி.

(3896)

# தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்க அரசு உரிய கவனம் செலுத்தும்

## பிரதமர் உறுதி

(கொழும்பு)

**நாம் ஆட்சியமைக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேசியம், தேசிய மரபுரிமைகள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளோம். அந்தவகையில் கடந்த அரசாங்கத்தால் வீழ்ச்சியடைந்துள்ள தேசிய மரபுரிமைகளை மீண்டும் புத்தாக்கம் செய்வது மகிழ்ச்சிக்குரியது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய உற்பத்திகள், தேசிய மரபுரிமைகளை மேம்படுத்துவதற்கு முறையான நிலைமை வழங்கியுள்ளோம்.

நாம் ஆட்சியமைக்கும் காலத்தில் தேசியம் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டது. இதன் காரணமாக தேசிய உற்பத்திகள் முன்னேற்றமடைந்தது.

கடந்த அரசாங்கம் தேசிய உற்பத்திகள், மரபுரிமைகள் சார்ந்த எந்த நடவடிக்கைகளையும் சீராக முன்னெடுக்காததால் இவை சார்ந்த தொழிற்துறைகளில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள் பொருளாதார மட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய தொழில் முயற்சியாளரால் அரச வங்கிகளில் கடன் பெறும் போது அவர்களிடம் தளர்வான கொள்கைகளை பின்பற்றுமாறு வங்கிகளின் பிரதானிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளோம். தேசிய உற்பத்திகளையும் மரபுரிமைகளையும் பாதுகாப்பதற்கும் ஊக்கப்படுத்துவதற் கும் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தும் எனத் தெரிவித்தார். (ஜ-4)

# இரத்தினபுரியில் கோரவிபத்து மூவர் பரிதாபமாக உயிரிழப்பு

## வேறு விபத்தில் 10 பேர் காயம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி - அவிசாவளை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நேற்றுக்காலை திவுரும்பிட்டி பகுதியில் லொறியும் ஆட்டோவும் மோதியதில் இவ்விபத்து சம்பவித்தது.

ஆட்டோவில் பயணித்த 48, 53, 57 வயதுடைய நபர்கள் உயிரிழந்துள்ளதுடன் லொறி சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, கொழும்பு - இரத்தினபுரி பிரதான வீதியில் புஸ்செல்ல பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 10 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பயணிகள் பேருந்து ஒன்றும் பணியாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்றும் மோதி இந்த விபத்து இடம்பெற்றது. (ஜ-4-6)

# பிள்ளையானுக்கு பிணை?

(கொழும்பு)



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரான பிள்ளையான் என்ற சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு விரைவில் பிணை வழங்கப்படலாம் என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்திரகாந்தன் சுமார் 5 ஆண்டுகளாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பிணையில் வெளிவர முடியாத பயங்கரவாதம் சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில் இத்தகவல் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பாரிய நிகழ்வுகளை நடத்த முடியாது

## தற்கால சூழ்நிலையில் அனுமதியில்லை என்கிறார் சுதத் சமரவீர

(கொழும்பு)

நாட்டில் கொரோனா பரவும் வாய்ப்பு அதிகமாக இருப்பதால் பாரியளவிலான நிகழ்வுகளை நடத்த அனுமதிக்க முடியாது என விசேட வைத்திய அதிகாரி சுதத் சமரவீர எச்சரித்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சம் நாட்டில் பரவலாக உள்ள நிலையில் புத்தகக் கண்காட்சி போன்ற பாரிய அளவிலான நிகழ்வுகளை நடத்துவதால் பலர் கலந்து கொள்ளக்கூடிய நிலை ஏற்படும். அவ்வாறு இடம்பெற்றால் அது சமூகத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் என அவர் எச்சரித்துள்ளார். நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஜ-4)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஆணொருவர் உயிரிழப்பு


(நாவலப்பிட்டிய)

நாவலப்பிட்டிய - கடியன்லேன பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்றுவந்த ஆணொருவர் உயிரிழந்தார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் குளவிக்கொட்டுக்கு இலக்கான நிலையில் நாவலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று பிற்பகல் உயிரிழந்தார்.

நாவலப்பிட்டியவைச் சேர்ந்த 65 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். (ஜ-4)

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு விழா ஆரம்பம்







(கொழும்பு)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதின்மூன்றாவது வருடாந்த பொதுப் பட்டமளிப்பு விழா நேற்றுப் புதன்கிழமை ஒலுவில் வளாக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை அமர்வில் பிரயோக விஞ்ஞானங்கள் பீட மற்றும் பொறியியல் பீட பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இரண்டாவது அமர்வில் இன்று முற்பகல் 9 மணியளவில் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்திற்கான பட்டமளிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஜ-4)

# போதைப்பொருள் பாவனையாளர்களை நல்ல பிரஜைகளாக மாற்ற பிரதமர் ஆலோசனை

(கொழும்பு)

**போதைப்பொருள் பாவனையாளர்களை தொழிற்சாலைகளில் பணியில் ஈடுபடுத்தி சமூகத்துக்கு ஏற்ற பிரஜைகளாக மாற்ற வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விருப்பம் தெரிவித்துள்ளார்.**



சிறைகளில் பிள்ளைகளுடன் சிறைவாசம் அனுபவிக்கும் தாய்மார்கள் குறித்த விபரங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன் போது கருத்துத் தெரிவிக்கையில், போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறைவாசம் அனுபவிப்போரை பணிகளுக்கு ஈடுபடுத்துகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பிரதமர் மேலும் வலியுறுத்தினார். (ஐ-4)

# இலங்கை அரச போக்குவரத்து சேவையின் மன்னார் சாலை பணியாளர்கள் கண்டனப் போராட்டம்






(மன்னார்)

இலங்கை அரச போக்குவரத்து சேவையின் மன்னார் சாலை பணியாளர்கள் நேற்று புதன்கிழமை காலை பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டதோடு, கண்டன போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர்.

மன்னாரில் அரச போக்குவரத்துச் சேவையினை மேற்கொள்ள மன்னார் நகர சபையினால் தற்காலிகமாக வழங்கப்பட்ட இடம் மன்னார் நகர சபையினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு அதிரடியாக மூடப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் புதன்கிழமை காலை இலங்கை அரச போக்குவரத்து சேவையின் மன்னார் சாலை பணியாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளதோடு, மன்னார் பஸார் பகுதியில் காலை 9 மணியளவில் கண்டனப் போராட்டத்தையும்முன்னெடுத்தனர். (ஐ-5-285)

## ஐ.தே.க பிரதித்தலைவராக ருவான்

# சிறிகொத்தாவிலிருந்து ஆவணங்களை எடுத்துச்சென்ற நவீன் திஸாநாயக்க



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நவீன் திஸாநாயக்க கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் உள்ள தனது அலுவலகத்தில் இருந்த ஆவணங்கள் உட்பட பொருட்களை எடுத்துச் சென்றுள்ளதாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தனது ஆதரவாளர்கள் சிலருடன் நேற்று சிறிகொத்தாவிற்கு சென்ற நவீன் திஸாநாயக்க அலுவலகத்தில் இருந்த தனது ஆவணங்கள் உட்பட பல பொருட்களை எடுத்துச் சென்றுள்ளார்.

ருவான் விஜேவர்த்தன ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக தெரிவு செய்யப்பட்டு இரண்டு நாட்கள் செல்லும் முன்னர் நவீன் திஸாநாயக்க, தனது அலுவலகத்தில் இருந்த ஆவணங்களை எடுத்துச் சென்றுள்ளார்.

நவீன் திஸாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை பதவியை எதிர்பார்த்திருந்ததுடன் அதனை பலமுறை பகிரங்கமாக கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)



## மருத்துவ சபையை கண்காணிக்க ஐவர் அடங்கிய குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கை மருத்துவ சபையின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஐவர் அடங்கிய குழுவொன்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியினால் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழு இலங்கை மருத்துவ சபை தொடர்பாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராயவுள்ளது.


குறித்த குழுவில் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த பெரேரா, ராகம மருத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் பிரசந்த விஜேசிங்க, வைத்திய நிபுணர் அனுலா விஜேசுந்தர, வைத்திய நிபுணர் மைத்ரி சந்திரரத்ன, வைத்திய நிபுணர் தர்ஷன சிறிசேன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-4)

## மஹஜன சம்பதவில் 3.7 கோடி வெல்லப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத சீட்டிழுப்பில் இவ்வாரம் சங்கானை முகவர் தயாபரன் சுஜீஜன் ஊடாக 3.7 கோடி வெல்லப்பட்டுள்ளது.

இதே சங்கானைப் பிரதே சத்தில் 2013 ஆம் ஆண்டு 3.8 கோடி வெல்லப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய கொடியேற்ற உற்சவம் நேற்றுப் புதன்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமானது.
(படங்கள்:- கரணவாய், தும்பளை செய்தியாளர்கள்)

## ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத்தினரால் அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

பட்டதாரி நியமனங்கள் நிரா கரிக்கப்பட்டவர்கள் நேற்றுத் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரினை யாழ்.மாவட்ட அர சாங்க அதிபரிடம் கையளித்த னர்.

அண்மையில் அரசாங்கத் தினால் பட்டதாரிகளுக்கு வழ ங்கப்பட்ட நியமனங்களில் ETF, EPF இனை காரணம் காட்டி பட்டதாரி நியமனம் நிறுத்தப்பட் டிருந்தது.

அவர்களுக்குரிய மேல்மு றையீடுகள் கடந்த 15 ஆம் திகதி வரை முன்னெடுக்கப் பட்டு மாவட்ட செயலகங்கள் ஊடாக பிரதேச செயலகங்க ளில் கையளிக்கப்பட்டது.

எனவே இதன் காரணமாக இடை நிறுத்தப்பட்ட பட்டதாரிக ளுக்கான நியமனத்தை உடனே வழங்குமாறு ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத்தின் ஊடாக நேற்று இலங்கையில் அனை த்து மாவட்ட செயலகங்களிலும் மகஜர் கையளிக்கப்பட்டன.

அதனடிப்படையில்யாழ்.மாவ ட்டச் செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபரிடமும் கையளி க்கப்பட்டது.

பட்டதாரிகளினால் மகஜர் கையளிக்கப்பட்டபின் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இன்றைய தினம் (நேற்று) ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத்தினர் என்னை சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகள் அடங்கிய அதாவது சில ஊழி யர் சேமலாப நிதி காரணத்தி னால் அவர்களுடைய நியமன ங்கள் நிறுத்தப்பட்டன.

அதனை துரிதப்படுத்து மாறு கோரிக்கை அடங்கிய மகஜரினை என்னிடம் கைய ளித்தனர்.

உள்ளூராட்சிமாகாண சபை அமைச்சர் மற்றும் ஜனாதிபதி செயலகத்திற்கு சமர்ப்பிக்கு மாறு என்னிடம் கையளித்துள் ளார்கள்.


என்னை பொறுத்தவரை க்கும் அரசாங்கம் அவர்களு டைய கோரிக்கையினை செவி மடுத்து மேல்முறையீடு சம ர்ப்பிப்பதற்கான காலஅவகாச த்தை வழங்கியிருந்தது.

அந்தக் காலப்பகுதிக்குள் கிடைக்கப்பெற்ற விண்ணப்ப ங்களுக்கு நியாயமான காரண ங்கள் இருப்பின் அதனை சாதக மாக பரிசோதனை செய்து ஒரு தகுந்த நடவடிக்கையை அரசா ங்கம் எடுக்கும் என நம்புகின் றேன்.

மேலும்கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பத்தினை இணை யத்திலும் அதனைப் பார்க்கக் கூடியதான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது.

அதற்கான தீர்மானம் மிக விரைவில் அரசாங்கத்தினால் அறிவிக்கப்படும் அல்லது ஜனா திபதி செயலகத்தினால் விரை வில் அறிவிக்கப்படும் என நம்பு கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (5-2-8-18)

## மரண அறிவித்தல்



பிறப்பு 13 • 12 • 1971

இறப்பு 15 • 09 • 2020

### மாரிமுத்து சிவகுமார்

(ஆசிரியர், உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)

மாவை - கலட்டி, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் தவசிகுளம், கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட மாரிமுத்து சிவகுமார் கடந்த 15.09.2020 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மாரிமுத்து - பத்மினி தம்பதியரின் அன்பு மகனும் சத்திய நாயகியின் (ஆசிரியை, விடத்தற்பளை கமலாசினி மகா வித்தியாலயம்) பாசமிகு கணவரும் புனிதநாணியின் அன்புச் சகோதரனும் இளங்குமரன், சுருதி, திவ்வியன், சிவதனுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகராசா, வரதராசா, சௌந்தரராசா, விஜயராசா, ரகுராசன், துசியந்தராஜன், பவளராணி, சிதம்பரநாயகி ஆகியோரின் மைத்துனரும் சிறிரஞ்சன், ஸ்ரீகாந்தன், ஸ்ரீதரன், நந்தினி ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (17.09.2020) அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவசிக்குளம், கொடிகாமம்.

(C-331)

தகவல்: குடும்பத்தினர்.

## உடுப்பிட்டியில் நிலக்கீழ் பதுங்கு குழி கண்டுபிடிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். உடுப்பிட்டி பகு தியில் நிலக்கீழ் பதுங்கு குழி கண்டு பிடிக்கப்பட்டு ள்ளது.

தனியார் காணி ஒன் றைத் துப்புரவு செய்ய முற்பட்ட போதே நிலத்த டியில் கொங்கிரீட் தூண் கள் காணப்பட்டன.

அவற்றை தோண் டிய போது உள்ளே பாரிய பதுங்கு குழி ஒன்று இரு ப்பது கண்டுபிடிக்கப்பட் டது.

அங்குள்ள கொங்கி றீட் தூண் ஒன்றில் 1980 ஆம் ஆண்டு கட்டப்பட் டதாக எழுதப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வல் வெட்டித்துறை பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இது தமிழீழ விடுதலை புலிகளால் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளி யிடப்பட்டுள்ளது.(5-4-8)

## விவசாயிகளின் பிரச்சினைகள் விரைவாகத் தீர்க்கப்படும்

### இராஜாங்க அமைச்சர்

(நெளுக்குளம்)

"சுபீட்சத்தின் நோக் கில் விவசாய மறுமலர் ச்சி" என்ற திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும், விவசாயிகளுடனான கலந்துரையாடல் ஒன்று வவுனியா நகரசபை மண் டபத்தில் நேற்று இடம் பெற்றது.

குறித்த கலந்துரை யாடலில் பிரதம விரு ந்தினராக உயர் தொழில் நுட்ப வேளாண்மை இரா ஜாங்க அமைச்சர் சசீந் திர ராஜபக்ஷ கலந்து கொண்டதுடன், வன்னி பாராளுமன்ற உறுப்பி னர் காதர் மஸ்தான், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமதிபால, விவசாய திணைக்கள அதிகாரிகள், கமநல சேவை அதிகாரிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரை யாடலில் வவுனியா மாவ ட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளான வன வளத்திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் காணி விடுவிப்பு தொடர்பாக எடு த்துக்கூறப்பட்டதுடன், உர மானியம், நியாயமான விலையில் விதைகளை பெற்றுக்கொள்ளல் யானை களால் ஏற்படும் அசௌ கரியங்கள் மற்றும் பிர தேச ரீதியாக நெற்களஞ் சியசாலையை பெற்றுக் கொள்ளல் போன்ற விட யங்கள் அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டன.

இவற்றினை ஆராய் ந்த அமைச்சர் நிரந்தர காடுகள் தவிர்ந்த விவசா யிகளின் காணிகளை வனவளத்திணைக்களம் சுவீகரித்திருந்தால், அதனை விடுவிப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுப்பதுடன், ஏனைய பிர ச்சினைகள் தொடர்பாக வும் விரைந்து நடவடிக் கையினை எடுப்பதாக உறுதியளித்தார்.

(5-4-299)

# இலங்கையில் மசாஜ் நிலையங்கள் அற்ற மாகாணமாக வடமாகாணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மசாஜ் நிலையங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களில் வடமாகாணத்தில் எந்தவொரு மசாஜ் நிலையங்களும் இல்லை என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் 719 மசாஜ் நிலையங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று கூட வடமாகாணத்தில் இல்லை.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பொலிஸ் திணைக்களத்திடம் பெற்ற தகவலின் அடிப்படையிலேயே மேற்படி விடயம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலான காலப்பகுதியில் கிடைத்த தரவுகளிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் மசாஜ் நிலையங்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களில் 719 மசாஜ் நிலையங்கள் காணப்படுகின்றன. வடக்கு மாகாணத்தில் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ள எந்தவொரு மசாஜ் நிலையங்களும் இல்லை.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் நாட்டிலுள்ள மொத்த மசாஜ் நிலையங்களின் எண்ணிக்கையில் 2 சதவீதத்துக்கும் குறைவான மசாஜ் நிலையங்களே காணப்படுகின்றன.

இதன்படி கிழக்கு மாகாணத்தில் 13, ஊவா மாகாணத்தில் 32, சப்ரமுவ மாகாணத்தில் 36, வடமேல் மாகாணத்தில் 49, மத்திய மாகாணத்தில் 56, வடமத்திய மாகாணத்தில் 60, தென் மாகாணத்தில் 119, மேல் மாகாணத்தில் 354 மசாஜ் நிலையங்களும் காணப்படுகின்றன.

நாட்டிலுள்ள மொத்த மசாஜ் நிலையங்களில் சுமார் 50 சதவீதமான மசாஜ் நிலையங்கள் மேல் மாகாணத்திலேயே காணப்படுவதாக அந்தத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (5-8)

# வேளாண்மை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழி விவசாய சம்மேளனப் பிரிவுக்குட்பட்ட 2020/21 ஆம் ஆண்டுக்கான காலபோக வேளாண்மைக்கூட்டம் நாளை 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து விவசாயிகளும் தவறாது பங்குபற்றுமாறு கமக்கார அமைப்பு அறிவித்துள்ளது. (5-4)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்டத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களிற்கு 1.தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், 2.வரவேற்பாளர், 3.கட்டட நிர்மான உதவியாளர், 4.மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர், 5.சமையலாளர் 6.முதியோர் பராமரிப்பாளர், 7.மரவேலைத் தொழில்நுட்பம் (கட்டடம்). 8.மின்னியலாளர், 9.காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), 10.ஆங்கில கற்கைநெறி, 11.ஜப்பான் மொழி, 12.கொரிய மொழி ஆகிய கற்கை நெறிகளுக்கான போதனாசிரியர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக தகவல்களுக்கு மாவட்டக் காரியாலயம், இல. 12/1 ,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்ப்பாணம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (5)



யாழ்.மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிராமிய, வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த கடந்த திங்கட்கிழமை யாழ்.நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் கலாசார நிலையத்திற்கு விசேட கள விஜயமொன்றை மேற்கொண்டார். இந்த விஜயத்தில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் ச.சுதர்சன், யாழ்.மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படம்:- குப்பிழான் செய்தியாளர்)

# சைவப் புலவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் இல.143, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனைத்துச் செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (5-4)



# விவசாய அமைச்சர் யாழில்...

# அடுத்த 3 ஆண்டுகளின் பின் மரக்கறி இறக்குமதி தடை

(யாழ்ப்பாணம்)

அடுத்த மூன்று ஆண்டுகளில் வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு ஆகிய மூன்று மரக்கறிகளும் இறக்குமதிகளும் தடை செய்யப்படுமென விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயிகளுக்குத் தேவையான எல்லாவற்றையும் செய்ய நாம் தயாராகவுள்ளோம். எம்மிடம் போதியளவு பணம், தொழில்நுட்பம் உள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு ஆகிய மூன்று மரக்கறிகளுக்குமான இறக்குமதிகள் தடை செய் யப்படும்.

விவசாயிகளின் நலனைக் கருத்திற்கொண்டே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இம் முடிவு எடுக்கப்பட்டது.

விவசாயிகள் எல்லோரும் இப்பயிர்ச்செய்கைகளை ஆரம்பிக்க வேண்டும். உங்களுக்கான ஆதரவை வழங்க நாம் தயாராகவுள்ளோம்என மேலும் தெரிவித்தார். (5-8)

# பயிர்கள் காப்புறுதி செய்யப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

சின்ன வெங்காயம், வாழை, உழுந்து மற்றும் நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு காப்புறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

வடக்கின் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு நேற்று முன்தினம் யாழ்.விஜயம் மேற்கொண்ட விவசாய அமைச்சர் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற விவசாயிகளுடனான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.விவசாயிகள் குறித்த இப்பயிர்களிற்குக் காப்புறுதி செய்யப்பட வேண்டும் என பாராளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணை தலைவருமான அங்கஜன் இராமநாதனை கேட்டதற்கு அமைவாக இக் காப்பறுதி நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுள்ளது. (5-8)

# விதை உருளைக்கிழங்கு வழங்கத் தயார்

(யாழ்ப்பாணம்)

மானிய அடிப்படையிலான விதை உருளைக்கிழங்குகளை விநியோகிக்கத் தயாராகவு ள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

யாழ்.விஜயம் மேற்கண்ட அவர் விவசாயிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்தார். (5-8)

# எதிர்வரும் ஜனவரியில் யாழில் மஞ்சள் உற்பத்தி

(சாவகச்சேரி)

யாழில் மஞ்சள் உற்பத்தியை எதிர்வரும் ஜனவரியில் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதாக முன்னாள் விவசாய பிரதி அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை தென்மராட்சி - எழுதுமட்டுவாழ் பகுதியில் விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுடன் சென்று நவீன வர்த்தக ரீதியிலான முறையில் அமையப்பெற்ற மாமரச் செய்கையை பார்வையிட்ட பின்னர் மக்களுடன் உரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழில் மஞ்சள் உற்பத்தியை ஊக்குவிக்கும் செயற்றிட்டம் ஒன்றினை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இருந்து மேற்கொள்வதற்கு விவசாய அமைச்சர் உதவுவதாக உறுதியளித்துள்ளார்.

எனவே அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என மேலும் அவர் தெரிவித்தார். (5-4-8-30)

# 50% மானியத்துடன் முட்கம்பிகள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

கட்டாக்காலிகள் வயல் நிலங்களுக்குள் உள்நுழைவதைத் தடுக்கும் பொருட்டு அமைக்கப்படும் முட்கம்பிகள் 50 வீத மானியத்துடன் வழங்கப்படுமென விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு முட்கம்பிகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்தன.

இம்முறை 50 வீத மானியத்துடன் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார். (5-8)

# நாடு முழுவதும் விசேட தேடுதல் நடவடிக்கை துப்பாக்கிகள், கைக்குண்டுகளுடன் 10 பேர் கைது

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது உள்நாட்டு, வெளிநாட்டு துப்பாக்கிகள், கைக்குண்டுகள் மற்றும் துப்பாக்கி ரவைகளோடு சந்தேகநபர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் விசேட அதிரடிப் படையின் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கைகளின் போது மீட்டியாகொட - கலுபே பகுதியிலுள்ள காணியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பிரிஸ்டல் துப்பாக்கி 1, வெளிநாட்டு போர 12 ரக துப்பாக்கி 1, உள்நாட்டு போர 12 ரக துப்பாக்கி 1, வெளிநாட்டு கைக்குண்டுகள் 2 மற்றும் 9 மில்லிமீற்றர் அளவிலான துப்பாக்கி ரவைகள் 10 ஆகியன இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன. துப்பாக்கிகளை மறைத்து வைத்திருந்த சந்தேகநபர் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

ஹொரண விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய திக்வெல்ல நகர்ப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டு ரிவால்வர் வகை துப்பாக்கிகள் 2, உள்நாட்டு போர 12 ரக துப்பாக்கி 1 மற்றும் 3.8 மில்லி மீற்றர் நீளமான துப்பாக்கி ரவைகள் 5 என்பவற்றோடு சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

கேகாலை - வத்துர பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் போர 16 ரக துப்பாக்கிகள் 2 மற்றும் துப்பாக்கி ரவைகள் இரண்டுடன் மொரொன் தொட்ட மற்றும் வத்துர பகுதிகளைச் சேர்ந்த 28 மற்றும் 52 வயதான சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

ருவன்வெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெஸ்மன் ஹில் வத்த பகுதியில் சீதாவக்கபுர குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது போர 12 ரக உள்நாட்டுத் துப்பாக்கிகள் இரண்டுடன் கல்பாத்த பகுதியைச் சேர்ந்த 60 மற்றும் 42 வயதுடைய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

யக்கலமுல்ல பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய உடுவெல்ல பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் போர 12 ரக வெளிநாட்டு துப்பாக்கியுடன் உடுவெல்ல பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டார். தொடர்ந்தும் அப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது வத்தஹேன பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் உடுவெல்ல - மாகெதற பகுதியைச் சேர்ந்த 46 வயதான மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

மதவாச்சி - பிஹிபிய கொல்லேவ மயானத்திலிருந்து போர 12 வகை வெளிநாட்டுத் துப்பாக்கியொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன் சந்தேகநபர்களை கைது செய்வது தொடர்பான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

உடுகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாக்கியாதெணிய பகுதியில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது போர 12 ரக வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் அப்பகுதியை பகுதியைச் சேர்ந்த 31 வயதான சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டார்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ஐ-4)


## அகவை அறுபதில் ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வுபெறும் திருமதி வினிபிறீடா பாலதாசன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்கள்

### வாழ்த்துச் செய்தி

ஓய்வு பெறும் திருமதி.வினிபிறீடா பாலதாசன் இப்பாடசாலையின் பழைய மாணவியாவார். இவர், பல்வேறு பாடசாலைகளில் 1988 தொடக்கம் இன்று வரை பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

மனையியலே இவருடைய நியமனமாக இருந்தபோதிலும், மாணவ, மாணவியருக்கு எல்லா விதத்திலும் பக்கபலமாக இருந்து செயற்பட்டதை பெருமையோடு நினைவுகூர்ந்து இவருக்கு நன்றிகூறி இவரை வாழ்த்துகிறோம்.

எமது கிறிஸ்தவ மன்றத்தை வளர்த்து, மாணவருக்கு பல்வேறு விதமாக பணிசெய்ததை இப்பாடசாலைச் சமூகம் மறக்க முடியாது. இதன் வழியாக எமது பங்கின் வளர்ச்சிக்கும் பாரிய நன்மை செய்துள்ளார் என்பதை நாம் நினைவுகூருகின்றோம்.

ஓய்வுபெறும் நிலையில், இவரை இக்கல்விச் சமூகம் இழக்கின்றது என்ற கவலையில் இருக்கும் இப்பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து இவருக்காக இறைவனுக்கு நன்றி கூறி, இறை ஆசீர் வேண்டி, இவருடைய ஓய்வுக்காலம் தொடர்ந்தும் கல்விப் பணியைச் செய்ய வாய்ப்புக் கிடைக்கவும் இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றோம்.

**ம.அன்ரன்**
**தூய மரியன்னை ஆலயம்**
**பருத்தித்துறை றோட், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

### ஆறிலிருந்து அறுபது வரை

கோப்பாய் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்கே தாய்ப்பாடசாலையாக விளங்கும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி என்னும் அன்னையின் மடியில் ஆறுவயதில் ஆரம்பக்கல்வியுடன் ஆரம்பித்த கல்விப் பயணம் அகவை அறுபதில் உப அதிபராக கல்விப் பணியினை நிறைவு செய்யும் இவ்வேளையில் அம்மணியை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இவரது குடும்பம் கிறிஸ்தவ குடும்பமாகையால் அவர்களுக்கும் கல்லூரி அன்னைக்கும் பாரம்பரிய வரலாற்றுத் தொடர்புகள் உண்டு. அவ்வாறான இவர் மாணவப் பருவத்தில் விளையாட்டு மற்றும் இணைப்பாடச் செயற்பாடுகளில் சிறந்து விளங்கியதுடன் முன்னணி மாணவியாகவும் திகழ்ந்துள்ளார். கல்லூரியின் பெயருக்கமைவாக கிறிஸ்தவ பாரம்பரியங்களையும் விழுமியங்களையும் பின்பற்றுபவராகவுள்ள இவர் தான் கொண்ட சமயத்திலும் தனது கல்லூரியிலும் அதீத பற்றின் காரணமாக பாடசாலை வளாகத்திலமைந்துள்ள கிறிஸ்தவ வழிபாட்டு ஸ்தலத்தில் தேவமாதா சிலையொன்றை பிரதிஷ்டை செய்து வழிபாட்டிற்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவர் தனது பாடத்துறையான மனைப்பொருளியலினூடாக பல மாணவிகளை உயர்கல்விக்கு அனுப்பி வைத்த பெருமைக்குரியவர். அதனால் தனக்கென ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கியுள்ளார் என்றால் மிகையாகாது. அவ்வாறான சிறந்த ஆளுமை மிகுந்த இவர் ஓய்வு பெறும்நிலையில் ஓய்வுக்காலத்தில் உடல், உள, ஆன்மீக ரீதியில் சிறந்து விளங்கி சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

**பூ.ஸ்ரீஸ்கந்தராசா J.P**
**தலைவர், ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**



### சேவையாற்றிய பாடசாலைகள்

யா/கதிரிப்பாய் சுப்பிரமணிய மகா வித்தியாலயம்
17.08.1988-15.02.1991

யா/கோப்பாய் மகா வித்தியாலயம்
05.01.1993-01.12.1997

யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
06.01.1993-09.12.2000

யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
27.02.1997-08.12.2000

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
01.01.2001-16.09.2020

### பாராட்டி வாழ்த்துகின்றேன்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அன்னையின் புதல்வியாக ஆரம்பக்கல்வியுடன் ஆரம்பித்து உயர்தரம் வரை கற்று ஆசிரியராகி உப அதிபராக பணியினை நிறைவு செய்யும் திருமதி பாலதாசன் வினிபிறீடா அவர்களை மணிவிழா நாளதனில் உளமார பாராட்டி வாழ்த்துவதில் பூரிப்படைகின்றேன்.

இவர் முப்பத்திரண்டாண்டுகள் ஆசிரியப் பணியினை சிறப்பாக ஆற்றியுள்ளார். அக்காலப்பகுதியில் இருபது வருட சேவையை தனது தாய்ப்பாடசாலையான எமது கல்லூரிக்கு வழங்கியுள்ளார். அதிலும் இறுதி வருடங்கள் உப அதிபராகப் பணியாற்றி கல்லூரியின் முகாமைக்கு உரமாகவிருந்து வலுச்சேர்த்துள்ளார். முகாமைத்துவ குழுவின் சிரேஷ்ட உறுப்பினரான இவர் கல்லூரியின் தரமேம்பாட்டினை மதிப்பீடு செய்யும் உயரிய பணியினை மிகவும் நேர்த்தியாக நிறைவேற்றுபவர். மேலும் மனைப்பொருளியல் பாடத்தினை உயர் வினைத்திறனுடன் மாணவிகளுக்கு கற்பித்து அவர்களை உயர்கல்விக்கு வித்திட்டவரென்றால் மிகையாகாது. கல்லூரியின் கிறிஸ்தவ மன்றத்தின் பொறுப்பாசிரியராகவிருந்து கிறிஸ்தவ நிகழ்வுகளை சிறப்பாக வழிநடத்தியுள்ளார். குறிப்பாக ஒளிவிழாக்களை திட்டமிட்டு மிக விமர்சையாக நடத்துவதில் கைதேர்ந்தவர்.

இன்று அகவை அறுபதை அடைந்துள்ள நிலையில் கல்விக் களத்தினிலிருந்து ஓய்வுபெறும் திருமதி பாலதாசன் வினிபிறீடா அவர்கள் ஆரோக்கியத்துடன் கூடிய நீண்ட ஆயுளைப் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டி உளமார வாழ்த்துகின்றேன்.

**திரு.ச.வேலழகன், அதிபர்,**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

### கோட்டக் கல்விப்பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

திருமதி. வினிபிறீடா பாலதாசன் அவர்கள் இப்பாடசாலையிலேயே தனது ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்தரம் வரை கற்று, இப் பாடசாலையிலேயே அதிககாலம் ஆசிரியராகப் பணியாற்றியவர். 1988 ஆம் ஆண்டில் ஆசிரியப் பணிக்குள் நுழைந்த திருமதி.வி.பாலதாசன் அவர்கள் மனையியல் பாடத்துறை வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு அதிக மாணவர்களை உயர் கல்விக்கு செல்ல வித்திட்டவர். தாண் சேவையாற்றிய 32 வருட காலத்தில் 20 வருடங்களை ஆசிரியராகவும் இறுதி வருடத்தில் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் உதவி அதிபராகவும் கடமையாற்றி இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உரமூட்டியவர்.

60 ஆவது அகவையில் ஓய்வுபெறும் திருமதி.வினிபிறீடா பாலதாசன் ஆரோக்கியமுடன் நீண்ட ஆயுள் பெற்று வாழ அவரையும், அவரது குடும்பத்தவரையும் இறை அருள் வேண்டி உளமார வாழ்த்துகின்றேன்.

**நா.சிவநேசன்,**
**கோட்டக் கல்விப்பணிப்பாளர்,**
**கோட்டக் கல்வி அலுவலகம், கோப்பாய்.**

# தற்கொலைகளை தடுப்பதற்கு உள நல வைத்தியர்கள், ஆலோசகர்கள் முன்வர வேண்டும்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



(நெளுக்குளம்)

**அண்மைய காலங்களாக அதிகரித்து காணப்படும் தற்கொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு உளநல வைத்தியர்கள், பொது அமைப்பினர்கள், உறவினர்கள் ஆகியோர் தமது பங்களிப்புக்களை வழங்க வேண்டும் என வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த தெரிவித்துள்ளார் .**

வவுனியாவில் ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஒருவாரத்தில் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்து காணப்படுகின்றது. இதற்கான காரணங்களை இனங்கண்டு அவற்றை தடுத்து நிறுத்துவதற்குரிய பொறிமுறைகளை உருவாக்குவதற்கு சேவை நலன்கொண்ட உள நல வைத்தியர்கள், பொது அமைப்பினர், ஆலோசனை வழங்குநர்கள், உறவினர்கள் முன்வரவேண்டும்.

ஒருவர் தற்கொலை செய்து கொள்வதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்தால் அக்காரணம் மிகச்சிறியதாகவே காணப்படுவதுடன் அதனை தீர்த்துக்கொள்ளவும் அவரால் முடியும்.

ஒருவர் மன அழுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை உறவினர்கள் அறிந்து கொள்ளவேண்டும். அதன் பின்னர் அவரை ஒரு உளநல வைத்தியரிடம் அல்லது உள நல ஆலோசனை வழங்குநரிடம் அழைத்து சென்று அவரிடம் காணப்படும் மன அழுத்தங்களை அறிந்து கொள்ள முற்பட வேண்டும்.

ஒரு சில நொடிகளில் ஏற்படும் மன அழுத்தங்களால் வாழ்வையே மாய்த்துக் கொள்ளும் நிலைக்கு அவர்கள் செல்கின்றனர்.

அவர்கள் குடும்பத்தினரின் நிலைகளை சற்றும் நினைத்துப் பார்ப்பதில்லை. அவர்களையும் துன்பத்திற்கு இட்டுச் செல்லும் முடிவுகளை தற்கொலை செய்பவர் எடுப்பதால் அவரது உறவினர்கள் மன உள ரீதியாக பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதிலிருந்து அவர்கள் மீட்சியடைவதற்கு பல ஆண்டுகள் செல்கின்றன .

எனவே தற்கொலை செய்யும் நிலையை அவரது மனத்திலிருந்து அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான நடவடிக்கையினை உள நல வைத்தியர்கள், உளநலத்துறை அதிகாரிகள், சிறுவர்கள், பெண்கள் அமைப்புக்களினால் முன்னெடுக்க முடியும்.

தற்கொலை செய்யும் நிலைக்குச் செல்பவர்கள் மனம் விட்டு உறவினர்கள், பெரியோர்களுடன் உரையாட வேண்டும். இவ்வாறான நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு பொது அமைப்புக்கள் தமது பங்களிப்புக்களை வழங்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (5-4-299)

# கிளிநொச்சியில் விவசாயிகளை சந்தித்து கலந்துரையாடிய விவசாய அமைச்சர்



(முறிகண்டி)

கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்த கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போரை சந்தித்து கலந்துரையாடினார்.

"சுபீட்சமான நோக்கில் விவசாய மறுமலர்ச்சி" எனும் தேசிய வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர்கள் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த குழுவினர் இரணைமடு விவசாய ஆராய்ச்சி நிலையம், யாழ் பல்கலைக்கழக விவசாய பீடம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்திருந்தனர்.

தொடர்ந்து பரந்தனில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தில் விவசாயிகள், பண்ணையாளர்களை சந்தித்தது அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் கேட்டறிந்தனர்.

குறித்த சந்திப்பில் கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் இராஜாங்க அமைச்சர்களான டி.பி.ஹேரத், ஷீந்திர ராஜபக்ஷ, மொஹான் டி சில்வா, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவரும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவருமான அங்கஜன் இராமநாதன், திணைக்களங்கள் சார் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பண்ணையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே கருத்து தெரிவிக்கையில், விவசாயிகள்,பால் உற்பத்தியாளர்களிற்கு மானியங்கள் தேசிய வேலைத்திட்டத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் விவசாயத்திற்கு தேவையான பசளை மானியமாக வழங்கப்படவுள்ளது. அதேவேளை மரக்கறி, மஞ்சள், கிழங்கு போன்றவற்றுக்கு விதைகளும் மானியமாக வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

குறித்த உற்பத்திப் பொருட்களுக்கான சந்தைவாய்ப்புக்களையும் ஏற்றுமதிகளையும் முன்னெடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

விவசாயத்திற்கான நீர்த் தேவையைப்பூர்த்தி செய்யும் வகையில் தூவல் நீர்ப்பாசன முறையை நடைமுறைப்படுத்தும் வகையில் அதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (5-4-100)





# புனர்வாழ்வு நிலையம் திறப்பு



(மன்னார்)

போதை பொருள் பாவனை காரணமாக மனதளவில் பாதிக்கப்படவர்களுக்கு குறிப்பாக இளைஞர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் முகமாகவும் அவர்களுக்கான ஆலோசனைகள் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கும் சிகிச்சை நிலையத்தின் திறப்பு விழா மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சீ.ஏ. மோகன்றாஸ் தலைமை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

குறித்த நிகழ்வுக்கு கிராமிய வீடமைப்பு நிர்மாணத் துறை இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத் தொகுதியை திறந்து வைத்தார்.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புகுழு தலைவருமான காதர் மஸ்தான் மற்றும் மன்னார் மாவட்ட பிரதேச செயலாளர்கள், வீடமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் மன்னார் தேசிய வீடமைப்பு அதிகார சபை பணிப்பாளர், திட்ட மிடல் பணிப்பாளர், மாந்தை மேற்கு பிரதேச செயலக ஊழியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (5-4-30)

## இராசிபலன்

17.09.2020
புரட்டாதி 1, வியாழக்கிழமை
அமாவாசை மாலை 5.22 மணிவரை
பூரம் முற்பகல் 10.57 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
சந்திராஷ்டமம் சதயம்
அமாவாசை விரதம், மஹாளயபட்ச முடிவு வளவன்

**மேஷம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் அல்லது வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், குலதெய்வ வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்**
வீட்டு தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்**
உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**கடகம்**
தேவையற்ற விவாதத்தைத் தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

**சிம்மம்**
வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு பெருமை தரும் வகையில் அமையும்.

**கன்னி**
எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**துலாம்**
பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்**
தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, செய்தொழில் மேன்மை பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**,தனுசு**
செய்தொழில் முன்னேற்றம் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், தந்தை வழி உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மகரம்**
மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், உடல் நலனின் கவனம் தேவை

**கும்பம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலர், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


**மீனம்**
சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மை பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பேசன சுனமுண்டு.

எல்லா உணர்வுகளையும் நீ வெளிப்படுத்தத் தேவையில்லை

# பட்டதாரிகளின் மேன்முறையீடுகளை பரிசீலிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)

**அரச சேவையில் பயிலுநர் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் நியமனம் வழங்கப்படாத பட்டதாரிகளின் மேன்முறையீடுகளை பரிசீலிக்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.**



மேன் முறையீடுகளை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை நேற்றுமுன்தினத்துடன் நிறைவடைந்த நிலையில் நேற்று இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மேன்முறையீடுகள் விசேட குழுவினால் பரிசீலிக்கப்படவுள்ளன.

மேன்முறையீடுகளை ஆராயும் நடவடிக்கையை இரண்டு வாரங்களில் நிறைவு செய்ய உத்தேசித்துள்ளதாகவும் இதுவரை அரச சேவையின் பதவி வெற்றிடங்களுக்கு உள்வாங்கப்படவுள்ள பயிலுநர் பட்டதாரிகள் 50 ஆயிரம் பேருக்கு பயிற்சியளிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேன்முறையீடுகளை ஆராய்ந்ததன் பின்னர் மேலும் 10 ஆயிரம் அரச சேவை பதவிகளுக்கு பயிற்சியளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# தனிமைப்படுத்தலிலிருந்து 224 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் நிலையங்களில், தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த மேலும் 224 பேர் நேற்று புதன்கிழமை வெளியேறினர்.

பூஸா தனிமைப்படுத்தல் நிலையம், இராஜகிரிய தனிமைப்படுத்தல் நிலையம், பியகம தனிமைப்படுத்தல் நிலையம், புனாணை தனிமைப்படுத்தல் நிலையம், பெரியகாடு தனிமைப்படுத்தல் நிலையம், அநுராதபுரம் மற்றும் சிகிரியாவில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்தே இவ்வாறு



தமது தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 224 பேர் நேற்று வீடுகளுக்கு திரும்பினர்.

இதேவேளை. நாட்டில் இதுவரையில் தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 41 ஆயிரத்து 192 பேர் வெளியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 20 ஆவது திருத்தத்திற்கு யார் பொறுப்பு?

## ஹர்ஷ டி சில்வா கேள்வி

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் பொறுப்புக்கூறும் நபர் ஒருவர் இல்லாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சிந்திக்காது அவசர அவசரமாக கொண்டு வரப்பட்ட ஒரு யோசனையாகவே 20 ஆவது திருத்தம் காணப்படுகின்றது.

அலி சப்ரி கூறுகின்றார் தான் அதனை கொண்டுவரவில்லை என்று. ஜீ.எல்.பீரிஸ் தான் கொண்டுவரவில்லை என்று கூறுகின்றார். இந்த நிலையில் யார் இதனை கொண்டுவந்தவர் என்று தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது.


அத்துடன் அவர்களுக்குள்ளேயே பிரச்சினை ஏற்பட்டுள்



ளது. ஆரம்பத்திலேயே நாம் இதனால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

20



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

உ. தடைசெய்யப்பட்ட சொத்துக்களை தரித்து வைத்துக்கொள்வதற்கான கட்டணம்


சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 255(b). 255(c). 255(d) நகரசபைச் சட்டம்- 170 மற்றும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் உரிய விதிகள் பிரதேச சபைச்சட்டம்- 161(b) 161(c) 161(d). துணை விதி ஆக்கப்படல் அவசியமாகும்.

ஊ. நீர் துப்புரவேற்பாடு (Gully) சேவைக் கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272(5)(b) நகரசபைச் சட்டம்- 157(9)(b) பிரதேச சபைச் சட்டம்- 126 (ix)(b). துணை விதி ஆக்கப்படல் அவசியமாகும்.

எ. நூலக அங்கத்துவக் கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272(28)(f) நகரசபைச் சட்டம்- 157(13) பிரதேச சபை சட்டம்- 126(xiv) துணை விதி ஆக்கப்படல் அவசியமாகும்.




உள்ளூராட்சி மன்றங்கள் சேவைகள் வழங்கல் மூலம் வருமானம் தேடல்

**4.உத்தரவு ஆணை / பற்றாணைக் (warrant) கட்டணங்கள் மற்றும் குற்றப்பணங்கள்**

மாநகர சபை மற்றும் நகர சபை பிரதான வருமான விடய இலக்கம் - 350

பிரதேச சபை பிரதான வருமானம் விடய இலக்கம் - 50

சொத்துக்களைத் தடை செய்வதற்காக பிறப்பிக்கப்படும் உத்தரவு ஆணையின் அடிப்படையில் இக்கட்டணங்கள் அறவிடப்படும். இவ்வருமானத் தலைப்பின் கீழ் கொண்டுவரப்படும் உத்தரவு ஆணைக் கட்டணங்கள் மற்றும் குற்றப்பணங்களின் வகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

அ. எழுத்தாணை கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 252,254,255 நகரசபைச் சட்டம்- 170 மற்றும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் உரிய விதிகள் பிரதேச சபை சட்டம்- 159, 160.

ஆ. நீதிமன்ற அபராதங்கள்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 163 185(2)(b) நகரசபைச் சட்டம்- 158(2)(a) மற்றும் 4 ஆம் அட்டவணை பிரதேச சபை சட்டம்- 129(2) (a) மற்றும் முதலாம் அட்டவணை. அட்டவணைகள் தயாரித்து வைத்திருத்தல் வேண்டும்

இ. தண்டப்பணங்கள்


சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 163, 185(2)(b) நகரசபைச் சட்டம்- 158 மற்றும் 4ஆம் அட்டவணை பிரதேச சபை சட்டம்- 129(2) (a) மற்றும் முதலாம் அட்டவணை

ஈ. தாமதக் கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- வரி/வாடகை உடன்படிக்கை நகரசபைச் சட்டம்- வரி/வாடகை உடன்படிக்கை பிரதேச சபை சட்டம்- வரி/ வாடகை உடன்படிக்கை

உ. நட்டஈடு

சபையிடமுள்ள சொத்துக்கள் சேதமடைதலின் அடிப்படையில் அறவிடப்படும் கட்டணம் (உதாரணம்-வீதிகளைச் சிதைத்தல்). துணை விதி அவசியமாகும்.




உள்ளூராட்சி மன்றங்கள் பற்றாணைக் கட்டணங்கள் மற்றும் குற்றப்பணங்கள் மூலம் வருமானம் தேடல்

5. ஏனைய வருமானங்கள்

மேற்படி பிரதான வருமான விடயங்களின் கீழ் வராத வருமானங்கள் வேறு வருமானங்களுள் அடக்கப்படும்.

மாநகர சபைகள் மற்றும் நகர சபைகள் பிரதான வருமானம் விடய இலக்கம் - 360

பிரதேச சபை பிரதான வருமான விடய இலக்கம் - 60

இவ்வருமானத் தலைப்பின் கீழ் கொண்டுவரப்படும் வட்டி மற்றும் விற்பனைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

அ. முத்திரைக் கட்டணம்


சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 185(2) (c) நகரசபைச் சட்டம்- 158(2)(b) பிரதேச சபை சட்டம்- 129 (2)(b) பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குகள் 81. அட்டவணைகள் தயாரித்து வைத்திருத்தல் வேண்டும்.

ஆ. ஊழியர் கடன் மற்றும் வட்டி

சட்ட அதிகாரம் :- கடன் உடன் படிக்கைகள். துணை விதி அவசிய மாகும்

இ. முதலீட்டு வட்டி

சட்ட அதிகாரம் :- நிலையான வைப்புகள், சேமிப்பு வைப்புக்களுக்காக கிடைக்கின்ற வட்டி மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்பவற்றுக்காகக் கிடைக்கின்ற வட்டி. முதலீட்டுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளல்.




உள்ளூராட்சி மன்றங்களின் ஏனைய வருமானங்கள்

ஈ. விற்பனைகள்

சட்ட அதிகாரம் :- மூலதனச் சொத்து தவிர்ந்த சபை வசமுள்ள வேறு சொத்துக்களை விற்பதனால் கிடைக்கும் வருமானம் (படிவக் கட்டணம்/ உடைந்த பொருட்கள்/குப்பை கூழ விற்பனை). முறையான சபை இணக்கப்பாடு பெறப்படல்.

உ. நீர் விற்பனை செய்தல்

சபையினால் விநியோகிக்கப்படுகின்ற நீர் சேவைகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களால் இவ்வருமானம் பெற்றுக்கொள்ளப்படும். துணை விதி ஆக்கப்படல் அவசியமாகும்.

6. அரச நன்கொடைகளும் மீளளிப்புக்களும்

மாநகர சபைகள் மற்றும் நகர சபைகள் பிரதான வருமானம் விடய இலக்கம் - 370

பிரதேச சபை பிரதான வருமானம் விடய இலக்கம் - 70

இவ்வருமான தலைப்புகளின் கீழ் கொண்டுவரப்படுகின்ற வருமான வகைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

அ. ஊழியர்கள் சம்பளம் மற்றும் சபைக் கொடுப்பனவுகளை மீளச் செலுத்தல்

உள்ளூராட்சி மன்றங்களுக்கு இவ்வாறான உதவி வழங்குவதற்கு அரசாங்கம் எவ்விதத்திலும் கடப்பாடுடையதல்ல என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆ. பொது நன்கொடைகள்

குறிப்பிட்ட பணிக்கெனக் குறிப்பிடப்படாமல் வழங்கப்படுகின்ற அரச உதவி

இ. வெளிநாட்டு உதவி

அரசசார்பற்ற அமைப்பொன்றினூடாக அபிவிருத்திச் செயற்பாடொன்றுக்காக வழங்கப்படுகின்ற உதவி

**வருமான வகையும் துணை விதிகளும்**

உள்ளூராட்சி மன்ற முதன்மைக் கட்டளைச் சட்டங்கள் மற்றும் வேறு சட்டங்களால் அறவிடப்படுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள வருமான வகைகள் கீழே தரப்பட்டுள்ளன. அறவிடுவதற்கு இவற்றுக்கான துணை விதிகள் உருவாக்கப்பட வேண்டும்.

1.துணைவிதி:- குப்பை சுத்திகரிப்பு

வருமான வகை:- மாதாந்த குப்பைச் சுத்திகரிப்புக் கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272 (3) (b) நகரசபைச் சட்டம்- 157(9) (b) பிரதேச சபை சட்டம்-126 (ix)

(தொடரும்...)

# சர்வாதிகார ஆட்சிக்கு வழிகோலும் '20'

## ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் ஆதரவு வழங்காது

### - பாராளுமன்ற உறுப்பினர் அலவத்துவல -



(கொழும்பு)
அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்டுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை உருவாக்கியவர் யார் என்பதை கூறும் அளவிற்கு ஆளும் தரப்பினருக்கு முதுகெலும்பு இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சீ.அலவத்துவல தெரிவித்தார்.

இதேவேளை, ஜனநாயக ஆட்சி முறைக்கு பாதிப்பை ஏற்படுத்தி, சர்வாதிகார ஆட்சிக்கான ஏற்பாடுகளைக் கொண்டமையப்பட்டுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் ஒத்துழைப்பை வழங்காது என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர்,

தற்போது திருத்தம் தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும், அமைச்சர்களுக்குமே எதுவும் தெரியாது என்று கூறியிருக்கின்றார்கள்.

புதிய அரசியலமைப்பொன்றை தயாரித்து வருவதாகவும், அது முடிவடைந்தும் 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ளப் போவதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சர்வாதிகார ஆட்சிக்கான வழிவகைகளையே 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் காணப்படுகின்றது.

இந்நிலையில் மக்களின் உரிமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கொண்டு வரப்படவுள்ள 20 ஆவது திருத்தத்திற்கு நாங்கள் ஒருபோதும் ஒத்துழைப்பை பெற்றுக் கொடுக்க மாட்டோம்.

குறைந்தபட்சம் "வியத் மக" அமைப்பினரிடமாவது இந்த திருத்தம் தொடர்பில் அரசாங்கம் விளக்கத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

## அதிகரிக்கும் டெங்கு

(கொழும்பு)
**நாட்டில் இதுவரையான காலப் பகுதியில் 29 ஆயிரத்து 986 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜயசேகர தெரிவித்தார்.**

வொல்பெகியா பக்றீரியாவுடன் கூடிய நுளம்புகள் சூழலில் பரவியுள்ளது என எச்சரித்த அவர் அவை விருத்தியடைய 6 மாதங்கள் செல்லும் எனவும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## மகன் மீது கத்திக்குத்து தந்தை மீது தாக்குதல்

### வாழைச்சேனையில் சம்பவம்

(மட்டக்களப்பு)
இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் தந்தையும் மகனும் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முந்தினம் இரவு மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் இடம்பெற்றது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உணவகம் ஒன்றில் வைத்து இரு நபர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்ற போது அது குழு மோதலாக மாறியது.

குறித்த மோதலில் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் காயமடைந்த மகன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையிலும் தலைக் கவசத்தால் தாக்கப்பட்ட நிலையில் தந்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார்மேற் கொண்டு வருகின்றனர். (ஜ-4)

## நாலக டி சில்வாவின் மனு தள்ளுபடி



(கொழும்பு)
பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்குப் பொறுப்பான முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவால் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மனு உயர் நீதிமன்றத்தில் இருந்து மீளப் பெறப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தன்னைக் கைது செய்து தடுத்து வைத்தமை சட்டவிரோதமானது என அறிவிக்குமாறு கோரி குறித்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் யசந்த கோதாகொட ஆகியோர் கொண்ட மூவரடங்கிய நீதியரசர்கள் குழாமினால் இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வகையில், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியினால் நீதிமன்றத்தில் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது.

தனது மனுதாரர் மீதான விசாரணையை குற்றப் புலனாய்வுப் பிரிவில் இருந்து வேறு பிரிவுக்கு மாற்றுதல் மற்றும் மனுதாரருக்கு உரித்தான கொடுப்பனவுகளை பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகள் உயர் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், குறித்த கோரிக்கைகளுக்கு, பிரதிவாதிகள் இணங்கினால் அடிப்படை உரிமை மனுவை மீளப் பெறுக்கொள்ள தயாராக இருப்பதாகவும், உயர்நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த விசாரணை நடவடிக்கையை குற்றப் புலனாய்வுப் பிரிவில் இருந்து வேறு பிரிவுக்கு மாற்றுவது குறித்து, பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், மனுதாரரின் கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பில் கலந்துரையாடி தீர்வொன்றைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக உயர் நீதிமன்றத்தில் பிரதி சொலிசிட்டர் நாயகம் திலீப்பீரிஸ் தெரிவித்தார்.

இதனை அடுத்து, இந்த விடயம் தொடர்பில் இரு தரப்பினராலும் இணக்கம் காணப்பட்டதை அடுத்து, மனுதாரரான முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மனு உயர்நீதிமன்றத்தில் இருந்து மீளப் பெறப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த அடிப்படை உரிமை மனு உயர்நீதிமன்றத்தில் இருந்து மீளப் பெறப்பட்டதை அடுத்து, மனுவைத் தள்ளுபடி செய்வதாக மூவரடங்கிய நீதியரசர்கள் குழாமினால் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## சர்வதேச விமானப் பயணங்கள் ஆரம்பம்

(கொழும்பு)
மாலைதீவு மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து பயணங்களை ஆரம்பிக்கவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் சர்வதேச விமான நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரத்மலானை விமான நிலையத்தில் சர்வதேச விமான செயற்பாடுகளை அதிகரிப்பதற்கான அரசாங்க வேலைத்திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எல்லை விமான செயற்பாட்டிற்கு உள்ள கோரிக்கையை கருத்திற்கொண்டு மாலைதீவு மற்றும் இந்தியாவிற்கு விமானப் பயணத்தை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.


அதற்கமைய இரத்மலானை விமான நிலையத்திற்கு வரும் விமானங்களுக்கு மிகப்பெரிய நிவாரணங்களை வழங்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ஜ-4)

## சம்பளம் பெறாமல் பணியாற்றும் ஆசிரியர்

(கொழும்பு)
தெற்கில் உள்ள மிகவும் ஏழ்மையான மாணவர்களுக்காக அரசாங்கத்திடம் எவ்வித சம்பளமும் பெறாமல் 16 வருடங்களாக தன்னார்வமாக கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் தொடர்பில் தெரிய வந்துள்ளது. மாத்தறை - தெனியாய பிரதேசத்தில் இந்த ஆசிரியர் கற்பிப்பதாக தெரிய வந்துள்ளது. எம்.ஜீ.கமல் பிரசன்ன என்ற இந்த ஆசிரியர் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி முதல் தொடர்ந்து 16 வருடங்களாக தன்னார்வமாக பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பாரதம்

## ஒரே இரவில் காசாவில் தொடர் தாக்குதல்



(காசா)

காசா பகுதியில் நேற்று புதன்கிழமை ஒரே இரவில் இஸ்ரேலிய இராணுவம் தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதல் காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது என்று பாலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலிய போர் விமானங்கள் வடக்குப் பகுதியில் உள்ள பீட் லஹியாவில் உள்ள ஒரு இடத்தில் ஏவுகணைகளை வீசின என்றும் மத்திய காசாவில் உள்ள நகரமான டெய்ர் அல்-பாலாவிலும், தெற்கு காசாவில் உள்ள கான் யூனிஸின் சில பகுதிகளையும் அவர்கள் குறிவைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த தாக்குதல் சம்பவங்களில் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

காசா பகுதியை நிர்வகிக்கும் ஹமாஸ், எங்கள் மக்கள் அல்லது எதிர்ப்பு தளங்களுக்கு எதிரான எந்தவொரு ஆக்கிரமிப்புக்கும் நேரடியாக பதில் கொடுக்கும் என இஸ்ரேலை எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## சர்வதேச ஓசோன் தினம் நேற்றாகும்

(ஜெனிவா)


நேற்று உலக ஓசோன் பாதுகாப்பு தினமாக அறிவிக்கப்பட்டு, அது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

உலகளவில் அதிகரித்து வரும் ஓசோன் படல அடர்த்தி குறைவின் காரணமாக ஐக்கிய நாடுகள் சபை செப்டெம்பர் 16 ஆம் திகதியை, சர்வதேச ஓசோன் தினமாக அறிவித்தது.

சூரியகதிர்கள் நேரடியாக பூமியை வந்தடையும் போது, அதிலுள்ள புற ஊதாக்கதிர்களால் பூமியிலுள்ள உயிரினங்களுக்கும் இயற்கை வளங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதால் இயற்கையாக பூமியின் மேற்பரப்பில் ஓசோன் படலம் அமையப் பெற்றிருக்கிறது.(2)

## சென்ற வாரம் தோல்வி இந்த வாரம் வெற்றி

## 9 செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்பிய சீனா



(பீஜிங்)

சீனா தனது 2 ஆவது கடல் ஏவுதளத்தில் இருந்து ரொக்கெட் மூலமாக 9 செயற்கைக் கோள்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

சீனாவின் ஜிலின் மாகாணம் சாங்சுன் நகரில் மஞ்சள் கடல் பகுதியில் சீனா தனது 2 ஆவது கடல் ஏவு தளத்தை அமைத்துள்ளது. நேற்று முன்தினம் இந்த ஏவுதளத்தில் உள்ள ஒரு கப்பலில் இருந்து ரொக்கெட் ஒன்றை சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

இந்த ரொக்கெட்டில் 9 செயற்கைகோள்கள் விண்ணுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

முன்னதாக கடந்த சில தினங்களுக்கு முன்பு சீனா விண்ணுக்கு அனுப்பிய செயற்கைகோள் சுற்றுவட்ட பாதையில் நுழையாமல் தோல்வியைச் சந்தித்தது குறிப்பிடத்தக்கது. (2)

## கொரோனா வைரஸ் பருவ கால

## விஞ்ஞானிகள் அதிர்ச்சி

(டுபாய்)

**கொரோனா வைரஸ், பருவ கால வைரஸாக மாறும் என்ற அதிர்ச்சி தகவ வெளியிட்டுள்ளனர். உலக நாடுகளையெல்லாம் இன்றளவும் நடுங்க வைத்து கொரோனா வைரஸின் தன்மையைப் பற்றி லெபனான் நாட்டில் உள்ள பெ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து தங்கள் முடிவுகளை 'பிரண் ஹெல்த்' பத்திரிகையில் வெளியிட்டு இருக்கிறார்கள்.**

அதில்,

*கொரோனா வைரஸ் தொற்று தொடர்ந்து உலகத்தில் தங்கி இருக்கும். இது எதிர்ப்புச்சக்தியை மனிதர்கள் அடைகிற வரையில் ஆண்டு முழுவதும் பருவ கால நோய்போல வலம் வரும்.

எனவே பொதுமக்கள் கொரோனாவுடன் வாழ கற்றுக் கொள்ள வேண்டும்.

மேலும் முகக் கவசங்களை அணிவது, தனி மனித இடைவெளியைக் கடைப்பிடிப்பது, கை சுத்தம் பின்பற்றுவது, கூட்டங்களை தவிர்ப்பது உள்ளிட்ட சிறந்த தடுப்பு நடவடிக்கைகளை பொது மக்கள் தொடர வேண்டும்.

* எதிர்ப்பு சக்தி உருவாகிற வரையில், கொரோனாவின் பல அலைகள் பொதுமக்களை வந்து தாக்கும்.

* இன்புளுவென்சா மற்றும் பொதுவான கொரோனா வைரஸ்கள் மிதமான வெப்ப பகுதிகளில் குளிர் காலத்தில் உச்சம் பெறுகின்றன. ஆனால் வெப்ப மண்டல பகுதிகளில் ஆண்டு முழுவதும் பரவுகின்றன.

* காற்றிலும், காற்றின் பரப்புகளிலும் வைரஸ் உயிர் வாழும்.

* காய்ச்சல் போன்ற பிற சுவாச நோய்களுடன் ஒப்பிடும் போது, கொரோனா வைரஸ் அதிக அளவில் பரவும் தன்மையை கொண்டிருக்கிறது.

* நோய் எதிர்ப்பு சக்தியை




உலகின் நீளமான நெடுஞ்சாலை சுரங்கப்பாதையான "அடல் சுரங்கப்பாதை" பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், மணாலிக்கும் லடாக்கின் லே பகுதிக்கும் இடையே 8.8 கிலோ மீற்றர் நீளத்திற்கு, மலையை குடைந்து சுரங்கப்பாதை இந்த பாதை உள்ளது. முன்னாள் பிரதமர் அடல் பிகார் வாஜ்பாயின் நினைவாக அடல் சுரங்கப்பாதை என அழைக்கப்படு பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், இந்த மாத இறுதிக்குள் பொது பயன்பாட்டிற்கு திறக்கப்பட உள்ளது. பிரதமர் மோ நடைபெறுகின்றன.

இந்த சுரங்கப்பாதை பயன்பாட்டிற்கு வந்ததும், மணாலி-லே இடையிலான பயண தூரம் 46 கிலோ மீற்றர் குறை தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள அடல் சுரங்கப் பாதையானது 10 மீற்றர் அகலம் கொண்டது. இரு வழிப்ப

'அடல் சுரங்கப்பாதை 10 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. உலகின் மிக நீளமான நெடுஞ்சாலை சுரங்கப்பா சி.சி.டி.வி.கமராக்கள் பொருத்தப்பட்டிருக்கும், ஒவ்வொரு 500 மீற்றர் தொலைவிலும் அவசரகால வெளியேறும் சுரங்

## கொரோனா எனும் எனது பெயரை கேட்டவுடன் அனைவரும் அதிர்கின்றனர்



(கேரளா)

கேரள மாநிலம் ஆழப்புளாவில் உள்ள சுங்கோன் என்ற பகுதியில் வசித்து வருபவர் சைன் தாமஸ். இவரது மனைவியின் பெயர் கொரோனா.

இவருக்கு தற்போது 34 வயது. இவருக்கு 34 வருடங்களுக்கு முன் இப்பெயர் சூட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் அர்த்தம் கிரவுன் (Crown) அதாவது கிரீடம் என்பதாகும்

தற்போது 2020 இல் உலகையே ஆட்டிப்படைக்கும் கொரொனாவால் அவரது பெயரைக் கேட்டதும் மக்கள் பதறுகிறார்கள். ஒரு சிலர் அவரை கேலி செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இரத்ததானம் செய்வதற்காக பெயரை எழுதிய போது மருத்துவர்களே தனது பெயரைப் படித்து அதிர்ச்சியடைந்ததாக திருமதி.எஸ். கொரோனா கவலை தெரிவித்துள்ளார். (2)

அன்

8



(டொக்

ஜப்பா

ஆயிரத்தி

பன்று

அதில் 70.

# வெளிநாடு

## ...ால வைரஸாக மாறும்
## ...ர்ச்சி தகவல்

**...சி தகவலை விஞ்ஞானிகள்**
**... வைத்துக்கொண்டிருக்கும்**
**...ள்ள பெய்ரூட் அமெரிக்க**
**...'பிரண்டியர்ஸ் இன் பப்ளிக்**

...று
...டல
...தும்

...ப்பு
...ம்.
...ாச
...து,
...திக
...யை

...யை

இயற்கையான தொற்றுகளின் மூலமாகவோ அல்லது தடுப்பூசிகள் மூலமாகவோ அடைந்துவிட்டால், கொரோனா வைரஸ் பரவல் விகிதம் கணிசமாக குறைய வேண்டும். இதனால் பருவ கால காரணிகளுக்கு வைரஸ் அதிகமாக பாதிக்கப்படும்.

* இன்புளுவென்சா போன்ற அதே சுழற்சி முறையைப் பின்பற்றுகிற என்.எல்.63 மற்றும் எச்கேயு 1 போன்ற மிக சமீபத்தில் வெளிவந்தவை உள்ளிட்ட பிற கொரோனா வைரஸ்களுக்கும் இதுபோன்ற பருவ நிலை பதிவாகி உள்ளது.

* கொரோனா வைரஸ் தனிநபர் பாதிப்பு விகிதம், வளைகுடா நாடுகளில்தான் அதிகமாக இருக்கிறது.

இவ்வாறு விஞ்ஞானிகள் கூறி உள்ளனர்.

இந்த கொரோனா வைரஸ் பருவ கால நோயாக ஆண்டு முழுவதும் வலம் வரும் என்கிற நிலையில், கொரோனா வைரஸ்க்கு எதிராக பெரும்பான்மையான மக்கள் எதிர்ப்பு சக்தியை பெறுகிற வரையில், அதை தடுப்பதற்கான வழிமுறைகளை பொதுமக்கள் தொடர்ந்து பின்பற்றுவதுதான், வைரஸ் தாக்குவதில் இருந்து தற்காத்துக்கொள்ள உதவும். (2)



...நிலையில், இம்மாத இறுதியில் பயன்பாட்டிற்கு வர உள்ளது. இமாச்சல பிரதேசத்தின்
...கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 3100 மீற்றர் உயரத்தில்
...ழைக்கப்படுகிறது. மணாலி-லே நெடுஞ்சாலையில் உள்ள இந்த சுரங்கப்பாதையின்
...தமர் மோடி இதனை திறந்து வைக்க உள்ளார். இதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில்

...ற்றர் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து தட்பவெப்ப நிலைகளையும்
...ரு வழிப்பதையாக இது அமைக்கப்பட்டுள்ளது.
...ரங்கப்பாதை இது ஆகும். சுரங்கப்பாதையின் ஒவ்வொரு 60 மீற்றர் தொலைவிலும்
...றும் சுரங்கம் உள்ளது.


## ஜப்பானில் நூறு வயதை அண்மித்தவர்கள் எண்ணிக்கை 80 ஆயிரத்தை எட்டியது



(டோக்கியோ).

ஜப்பானில் நூறு வயதினை அண்மித்தவர்களின் எண்ணிக்கை 80 ஆயிரத்தினை கிட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. செப்டெம்பர் முதலாம் திகதி பன்று மேற்கொள்ளப்பட்ட கணிப்பிற்கு அமைய 80,450 பேர் காணப்படுவதாகவும் அதில் 70,975 பேர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## கொரோனா தடுப்பூசி சந்தைக்கு வந்தாலும் அனைவருக்கும் கிடைக்க நான்கு வருடங்களாகும்



(டில்லி)

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு சாத்தியமான தடுப்பூசி கண்டறியப்பட்டாலும் கூட 2024 ஆம் ஆண்டுவரை அது போதுமான வகையில் கிடைக்காது என தடுப்பூசி தயாரிப்பில் ஈடுபட்டுள்ள இந்தியாவின் புனேவைச் சேர்ந்த சீரம் மருந்தாக்க நிறுவனத் தலைமை செயல் அதிகாரி அதார் பூனாவாலா தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், அஸ்ட்ராசெனிகா நிறுவனங்களுடன் இணைந்து இந்தியாவில் கொரோனா வைரஸ் தடுப்பூசி தயாரிக்கும் ஒப்பந்தத்தை சீரம் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி போட்டுக் கொண்ட தன்னார்வலர்களில் ஒருவருக்கு அசாதாரணமான உடல் பக்க விளைவு தென்பட்டதால் அந்தப் பரிசோதனை இடைநிறுத்தப்பட்டு மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தடுப்பூசி ஒன்று கண்டறியப்பட்டால் கூட உலகம் முழுவதும் தேவையான அளவுக்கு விரைவாக அதனை உற்பத்தி செய்யும் திறனை மருந்தக நிறுவனங்கள் கொண்டிருக்கவில்லை என்று பூனாவாலா தெரிவித்துள்ளார்.

சாத்தியமான தடுப்பூசி ஒன்று சந்தைக்கு வந்தாலும் கூட அது அனைவருக்கும் கிடைக்க நான்கு முதல் ஐந்து ஆண்டுகள் வரை ஆகலாம். கொரோனா வைரஸ் தடுப்பூசி என்பது இரண்டு முறை போடக்கூடியதாக இருக்கும். தட்டம்மை, ரோட்டா வைரஸ் (Rotavirus) போல இரண்டு முறை போடக்கூடிய அந்த மருந்து தேவையென்றால், உலக அளவில் 15 பில்லியன் அளவுக்கும் மருந்து தேவை எனவும் பூனாவாலா கூறியுள்ளார்.

உலக அளவில் அஸ்ட்ராசெனிகா, நோவாவாக்ஸ் ஆகிய சர்வதேச மருந்தக தயாரிப்பாளர்களுடன் இணைந்து கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை தயாரிக்க இந்தியாவின் சீரம் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது.

அதன்படி, 100 கோடி அளவிலான மருந்துகள் இந்நிறுவனத்தால் தயாரிக்கப்படும். அதில் பாதி அளவு இந்தியாவின் தேவைக்காக வழங்கப்படும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

தேவைப்பட்டால் ரஷ்யாவின் கமாலேயா ஆய்வகத்துடன் சேர்ந்து அந்நாடு தயாரித்துள்ளதாக கூறும் ஸ்பூட்னிக் தடுப்பு மருந்து தயாரிப்பிலும் இணைந்து செயல்படுவோம் என்று சீரம் நிறுவனம் கூறியுள்ளது. (2)

## படகு கவிழ்ந்து அகதிகள் பலி



(திரிபோலி)

லிபியாவில் அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 24 பேர் பலியானார்கள். உள்நாட்டு போரால் நிலைகுலைந்துள்ள ஈராக், சிரியா, லிபியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும், வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர். இவர்கள் மத்திய தரைக் கடல் வழியாக சட்ட விரோதமாக படகுகளில் பயணம் செய்து ஐரோப்பிய நாடுகளை அடைகின்றனர்.

இப்படி மிகச் சிறிய படகில் அளவுக்கு அதிகமான மக்களுடன் இரகசியமாக மேற்கொள்ளப்படும் நீண்ட கடல் பயணங்கள் பல நேரங்களில் துயரத்தில் முடிந்து விடுகின்றன. எனவே இது தொடர்பாக சர்வதேச இடம்பெயர் அகதிகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் தொடர்ந்து மக்களை எச்சரித்து வருகின்றன.

இந்த நிலையில் லிபியாவின் ஜ்வாரா கடல்பகுதியில் அகதிகளை ஏற்றிக்கொண்டு 3 சிறிய படகுகள் சென்றன.

அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் படகு ஒன்று திடீரென கடலில் கவிழ்ந்தது. இதில் கப்பலில் இருந்த அனைவரும் நீரில் மூழ்கினர்.

இதுபற்றி தகவல் கிடைத்ததும் லிபிய கடலோர காவல் படையினர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து தீவிர மீட்பு பணியில் ஈடுபட்டனர். எனினும் 24 பேரை பிணமாகத்தான் மீட்க முடிந்தது. இந்த விபத்தில் மேலும் பலர் மாயமாகி இருக்கலாம் என்று தெரிகிறது. எனவே அவர்களை தேடும் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது. (2)

## இதுவரை 5 இலட்சத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் கொரோனாவால் பாதிப்பு

### அமெரிக்கா அக்கடமி அறிக்கை



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இதுவரை 5 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக புதிய அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

உலக அளவில் கொரோனா வைரஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது.

இங்கு நாளுக்கு நாள் கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், அமெரிக்காவில் கொரோனாத் தொற்று பரவத் தொடங்கியதிலிருந்து இதுவரை சுமார் 550,00 குழந்தைகள் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக குழந்தை மருத்துவத்துக்கான அமெரிக்க அக்கடமியின் புதிய அறிக்கை தெரிவிக்கிறது. (2)

# அமுல்படுத்தி இருக்கும் வீதிச்சட்டத்தை பொலிஸார் வாபஸ் பெற வேண்டும்

## கெமுனு வலியுறுத்து

**(கொழும்பு)**

**பேருந்து சேவைகளுக்கான ஒழுங்கையில் ஆட்டோ மற்றும் மோட்டார் வண்டிகளும் பயணிக்கவேண்டும் என பொலிஸார் நடைமுறைப்படுத்தி இருக்கும் சட்டம் ஏற்புடையது அல்ல. இதனைப் பொலிஸார் வாபஸ் பெற்றுக்கொள்ளாவிட்டால் தனியார் பேருந்துகள் போக்குவரத்து சேவையில் இருந்து ஒதுங்கிக்கொள்ளும் என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன எச்சரித்தார்.**



போக்குவரத்து பொலிஸார் நடைமுறைப்படுத்தி இருக்கும் வீதி ஒழுங்கு சட்டம் அமுல்படுத்தி இருக்கும் நிலையில் நேற்று முதல் பேருந்துகளுக்கான ஒழுங்கையில் ஆட்டோ மற்றும் மோட்டார் வண்டிகளும் பயணிக்க வேண்டும் எனப் பொலிஸாரின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீதி ஒழுங்கு சட்டம் திங்கட்கிழமை முதல் போக்குவரத்து பொலிஸாரால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதில் பேருந்துகளுக்கு என்று தனி ஒழுங்கு வர்த்தமானிப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் நேற்று முதல் ஆட்டோ மற்றும் மோட்டார் வண்டிகளும் பேருந்து ஒழுங்கையில் பயணிக்க வேண்டும் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் இந்த தீர்மானம் நாட்டில் இருக்கும் சட்டத்தை பொலிஸாரே மீறும் செயலாகும். இதற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்க இருக்கின்றோம். அத்துடன் ஆட்டோ, பேருந்து ஒழுங்கையில் பயணிப்பதால் நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

ஆட்டோ மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வேகத்திலே பயணிக்க முடியும். இவ்வாறான நிலையில் 60 தொடக்கம் 70 பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் பேருந்து அதற்கு பின்னால் பயணிப்பது பாரிய பிரச்சினையை ஏற்படுத்தக் கூடியதாகும்.

அத்துடன் இந்த வீதி ஒழுங்கு சட்டம் காரணமாக மோட்டார் வண்டி சாரதிகள் விபத்துக்களுக்கு ஆளாகும் அபாயம் இருக்கின்றது.

பொலிஸார், போக்குவரத்து சங்கங்கள் உட்பட அனைத்து தரப்பினரையும் அழைத்து வீதி ஒழுங்கு சட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாட ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

# கிராம மட்ட வீதி புனரமைப்பு 4 வருடங்களுக்குள் நிறைவு பெறும்

## ஜனாதிபதி நம்பிக்கை



(கொழும்பு)

கிராம மட்டத்தில் ஒரு இலட்சம் கிலோமீற்றர் பாதையை புனரமைப்பு செய்யும் நடவடிக்கைகளை 2024 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் நிறைவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக குறித்த கிராமிய வீதிகளை பிரதான வீதிகளுடன் இணைக்கும் திட்டத்தை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கிராமிய வீதி மற்றும் அடிப்படைவசதிகள் இராஜாங்க அமைச்சுக்கான வேலைத்திட்டங்கள் குறித்து ஆராயும் கலந்துரையாடலில் ஜனாதிபதி இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

சுபீட்சமான எதிர்காலம் என்னும் ஜனாதிபதியின் கொள்கைத் திட்டத்தின் ஊடாக இந்த மக்கள் தேவையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், புதிய பாலங்கள், சிறிய மற்றும் இரும்பு பாலங்கள் என்பன இதன்போது அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதேவேளை, கடந்த சில மாதங்களில் 8 ஆயிரம் கிலோமீற்றர் நீளமான வீதிகளுக்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதில் 400 கிலோமீற்றர் வீதி முழுமையாக புனரமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வீதி நிர்மாணப் பணிகளுக்கான கல், மண், மணல் ஆகியவற்றை முழுமையாக பெற்றுக்கொடுக்கும் பொறுப்பு மாவட்ட செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த திட்டங்களை முன்னெடுக்கும் போது ஏற்படும் காலதாமதம் மற்றும் போக்குவரத்து பாதிப்புகளை தவிர்க்குமாறும் ஜனாதிபதி இதன்போது ஆலோசனை வழங்கியுள்ளார். (2-7)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## துறவு!

ஒரு ஊரிலே வைர வியாபாரி இருந்தார். அவருக்கு ஒரு மனைவி. அவர்கள் இரண்டு பேர் மட்டும் தான். குழந்தை குட்டி கிடையாது. அவர்கள் இரண்டு பேருக்குமே மிகவும் தாராள மனசு. இருக்கின்ற செல்வத்தையெல்லாம் வாரி வாரி வழங்கினார்கள்.

அப்படியும் முழுமையான மனநிறைவு- மன அமைதி கிடைக்கவில்லை.

அவர் ஒரு நாள் தன் மனைவியிடம் சொன்னார்: "இதோ பாரு... நான் ஒரு பரதேசியாகி இந்த ஊரை விட்டு வெளியேறப் போகின்றேன். அதற்கு முன்னால் இருக்கின்ற சொத்தையெல்லாம் தான தருமம் செய்துவிடப் போகின்றேன். அதனாலே உனக்கு என்னென்ன தேவையோ அதையெல்லாம் முதலிலே நீ எடுத்துக் கொள் என்றார்.

அந்த அம்மா பார்த்தார்கள்." நீங்கள் போனதற்கு பின்பு எனக்கு மட்டும் என்ன இருக்கு? பிள்ளையா...குட்டியா...நானும் உங்களுடன் கூட வந்துவிடுகின்றேன்'' என்றார்கள். உன்னாலே ஊரு சுத்த முடியாது... காடு மேடெல்லாம் அலைய முடியாது... பசி-பட்டினி-குளிர்-வெயில் எல்லாவற்றுக்கும் ஈடுகொடுக்க வேண்டியிருக்கும்... அதனாலே உனக்கு இது வேண்டாம் என்றார்.

ஆனால் அந்த அம்மா பிடிவாதமாக நான் வந்தே தீருவேன் என்று உறுதியாக சொல்லிவிட்டார்கள்.வேறு வழியில்லாமல் அவர்களையும் அழைத்துக் கொண்டு அவர் புறப்பட்டார்.அதற்கு முன்னாடி இருக்கிறதையெல்லாம் வாரி வாரி வழங்கினார்கள். கடைசியாக கழுத்திலே கிடக்கிற நகைகளையும் கழட்டினார்கள் அந்த அம்மா.

'' என்ன இது... அதையும் கழட்டுகின்றாய்... எங்கள் கல்யாணத்திற்கு அடையாளமே அது தானே... '' என்றார் இவர்.

'' எப்பொழுது நாம் துறவு வாழ்க்கையை தொடங்கிவிட்டோமோ அப்பொழுதே கணவன்-மனைவி என்கின்ற பந்தம் எல்லாம் போய்விட்டது...இனிமேல் நீங்கள் வேறு நான் வேறு...இருந்தாலும் நாம் இப்பொழுது ஒன்றாக சேர்ந்து போவது எதற்கு என்றால் ஒருத்தருக்கொருத்தர் உதவியாகத்தான்.கழுத்திலே ஒரு சங்கிலி கிடந்தால், கஷ்டம் வரும்போது அதை விற்றுக் காசாக்கலாம் என்கின்ற எண்ணம் வரும்... அதனாலே அது வேண்டாம்" என்றுவிட்டார்கள்.

அதற்குப்பிறகு அவர்கள் இரண்டு பேரும் பல ஊர் சுத்தினார்கள், வெயில்..மழை...பசி...பட்டினி...அவருக்கு அந்த அம்மாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.இவ்வளவு கஷ்டத்துக்கும் ஈடு கொடுக்கிறாளே என்று ஆச்சரியமாகவும் இருந்தது.

"நீ ஊருக்குத் திரும்பிப் போய்விடேன் '' என்றும் சொல்லிப் பார்த்தார்." சுவாமி... நீர் இப்போது எம் கணவரல்ல... உம் பேச்சை யாம் கேட்பதற்கு '' என்றார்கள்.இப்படியே கொஞ்ச காலம் போச்சு. ஒருநாள் அவர்கள் இரண்டு பேரும் ஒரு காட்டு வழியாக போய்க் கொண்டிருந்தார்கள்.வழியிலே ஒரு பெரிய மாணிக்கக்கல் கிடந்தது.

முன்னாடி போய்க் கொண்டிருந்த அவர் அதைப் பார்த்து விட்டார். ''பின்னாடி வந்து கொண்டிருக்கின்ற தன்னுடைய மனைவி கண்ணிலே இது பட்டுவிட்டால் மறுபடியும் உலக ஆசை வந்து... சந்நியாசத்தை விட்டாலும் விட்டுவிடுவாள் '' என்று நினைத்து அதைக் காலாலே மிதித்து மறைத்துக் கொண்டார்.

பின்னாலே வந்த அந்த அம்மா... " அது என்ன சுவாமி... காலாலே மிதித்துக் கொண்டிருக்கின்றீர்கள்? "என்று கேட்டார்கள்.

"இது...இது வந்து...மாணிக்கக் கல்... இதைப் பார்த்து உனக்கு உலக ஆசைகள் வந்து, மனம் மாறிப் போய்விடுவோம் என்று பயந்து தான் இதை மறைத்தேன் " என்றார் அவர்.

இதற்கு அந்த அம்மா சொன்னார்கள், ''சுவாமி. தங்களுக்கு இன்னமும் மாணிக்கத்திற்கும் மண்ணாங்கட்டிக்கும் வித்தியாசம் தெரிகின்றதா? எனக்கு இரண்டும் ஒன்றாகத் தான் தெரிகின்றது.'' அப்படி என்றார்களாம்.

இதிலேயிருந்து என்ன தெரிகின்றது...துறவு என்பது அவ்வளவு சாதாரண சமாச்சாரமில்லை.இந்தக் காலத்து ஆசாமி ஒருத்தர். "எனக்கு என்று இருக்கிறது எல்லாவற்றையும் விட்டுவிட்டு சந்நியாசம் வாங்கிக் கொள்ளப் போகின்றேன்" என்றார்.

" உனக்கு என்று இருப்பது எவ்வளவு ? " என்றேன்

எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தால் மொத்தமாக ஒரு 50000 தேறும் என்றார்." என்ன சொத்தா" என்று கேட்டேன். " இல்லை ..கடன்" என்றார்.

# "மாகாண சபை அதிகாரங்கள் பிரதேச சபைகளுக்கு"



## பசில் கூறவில்லை என மறுக்கும் பெரமுன

(கொழும்பு)

மாகாண சபைகள் ஒழிக்கப்பட்டால் மாகாண சபைகளின் அதிகாரங்கள் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ கடந்த 11 ஆம் திகதி நடந்த பேச்சுவார்த்தையின் போது கூறியதாக வெளியாகியுள்ள தகவலில் உண்மையில்லை எனப் பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகளை அழைத்து கடந்த 11 ஆம் திகதி நடத்திய பேச்சுவார்த்தையின் போது பசில் ராஜபக்ஷ அப்படியான எந்தக் கருத்துக்களையும் வெளியிடவில்லை என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நடைமுறையில் உள்ள மாகாண சபை முறைமையை ஒழிக்க வேண்டும் என ராஜாங்க அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்து வருகிறார்.

அவரது இந்த நிலைப்பாட்டுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்குள் கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மாகாண சபைகள் ஒழிக்கப்பட்டால் அதன் அதிகாரங்கள் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படும் என பசில் ராஜபக்ஷ கூறியிருந்ததாக தகவல்கள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# 62 மனிதர்கள் 200 யானைகள் உயிரிழப்பு

## ஜனாதிபதி நேரடி கவனம்

(கொழும்பு)

**நாட்டில் இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் யானை தாக்கி 62 பேர் உயிரிழந்ததுடன் 200 யானைகள் உயிரிழந்துள்ளன என வனவளத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.**

யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல் நாடு முழுவதும் காட்டின் எல்லைப்பகுதிகளை அண்மித்து அமைந்துள்ள கிராமங்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில் ஜனாதிபதி நேரடி கவனம் செலுத்தியுள்ளார் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.



இவ்வாறு தொடர்ந்து யானைகளுடன் போராடிக்கொண்டிருக்கும் மக்கள் உரிய அதிகாரிகள் விரைவில் தீர்வுகளை முன்வைத்து தம்மை உயிராபத்தில் இருந்து பாதுகாக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு 122 பேர் உயிரிழந்ததுடன் 407 யானைகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஜப்பான் பிரதமருக்கு மகிந்த வாழ்த்து





(கொழும்பு)

ஜப்பான் புதிய பிரதமர் யோஷிஹைட் சுகாவுடன் இணைந்து பணியாற்ற இலங்கை தயாராக இருப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜப்பானின் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள யோஷிஹைட் சுகாக்கு வாழ்த்து தெரிவித்து அவரது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏற்கனவே இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த தம்முடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கின்றேன் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றம் வாக்கெடுப்பில் ஜப்பானின் புதிய பிரதமராக யோஷிஹைட் சுகா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கொரோனா வைரஸ் தொற்று மற்றும் பொருளாதார வீழ்ச்சியால் ஜப்பான் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் யோஷிஹைட் சுகா ஒரு முக்கியமான தருணத்தில் பதவியேற்கவுள்ளார்.

ஜப்பானில் மிக நீண்ட காலம் பணியாற்றிய பிரதமர் அபே, கடந்த மாதம் சுகாதார காரணங்களைச் சுட்டிக்காட்டி பதவியில் இருந்து விலகுவதற்கான தனது முடிவை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சுகாதார நிலையை உறுதி செய்யும் சான்றிதழ் வழங்கும் வரை கட்டுநாயக்க திறக்கப்படாது

(கொழும்பு)

சுகாதாரப் பிரிவால் நாட்டு மக்களின் சுகாதார நிலைமையை உறுதி செய்யும் சான்றிதழ் வழங்கும் வரை கட்டுநாயக்க விமான நிலையம் திறக்கப்படாதென சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாட்டில் தற்போது கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் கம்பஹா பிரதேசத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து இரகசியமாக நாட்டிற்குள் நுழைய முயற்சிக்கும் நபர்கள் தொடர்பில் கடற்படையினரால் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தல் என்பது இதுவரையில் சிறப்பான ஒரு நிலைமையில் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# தமிழர்களின் கழுத்தை அறுப்பேன் என எச்சரித்த பிரியங்கவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

லண்டனில் புலம்பெயர் தமிழர்கள் இலங்கைத்தூதரகம் முன் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது அவர்களின் கழுத்தை அறுப்பேன் என சைகை மூலம் எச்சரிக்கை விடுத்த இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக ஹற்றன் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.


ஹற்றன் கொமர்ஷல் பிரதேசத்தில் தனியார் காணியை உரிமையாளரின் அனுமதியின்றித் தனிமைப்படுத்தும் முகாமாக இராணுவம் பாவித்தமைக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு மீதான விசாரணை ஹற்றன் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ட்ரோக்ஸி முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

இராணுவம் தரப்பில் ஆஜராகிய இராணுவத்தின் சட்டப் பிரிவு சட்டத்தரணி மற்றும் அரச சட்டத்தரணி ஆகியோர், இராணுவத்திற்கு எதிரான வழக்கினை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு உரிமை கிடையாது என்று வாதிட்டனர்.

எதிர்தரப்பு வாதத்தை கவனத்திற்கொண்ட நீதிமன்றம், ஆட்சேபனையை எழுத்து வடிவில் எதிர்வரும் 29 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட அதேவேளை, வழக்கினை அன்றைய தினம் வரை ஒத்திவைத்துள்ளது.

இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவின் தளபதியான



மேஜர் ஜெனரல் பிரியங்க பெர்னாண்டோ ஹற்றன் நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்காக ஆஜராகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

69

கலாநிதி முருகர் குணசிங்கம்

மாற்றுக் கருத்துக் கொண்டவர்களும் கூட அவ்வாறான நிகழ்வுகளில் பங்கெடுத்துக் கொள்வதையும் விடுதலைப் புலிகளின் பின்னடைவு. விடுதலைப் போராட்டத்தின் பின்னடைவு என்று கருதும் பலரும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான கருத்துக் கொண்டவர்களும் விடுதலைப்புலிகள் அமைப்புக்குப் பின்னால் செல்வதும் பலரை வியப்புக்குள் ஆழ்த்தி இருக்கின்றது.

அத்தோடு டப்ளின் சுயாதீன நீதிபதிகள் வழங்கிய தமிழ் இன அழிப்பு நடவடிக்கையில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது என்ற தீர்ப்பும் இலங்கை அரசு போர்க்குற்றம் புரிந்ததற்கான அமெரிக்காவின் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்திற்கு முன்வைத்த கோரிக்கைகளும் இத்தாலிய மேல் முறையீட்டு நீதிமன்றம் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கம் அல்ல என்று தீர்ப்பு வழங்கியதும் மேற்கண்ட நாடுகளின் மனச்சாட்சியை நிச்சயம் உறுத்திக் கொண்டிலுக்கும்.

அத்தோடு புலம்பெயர்வாழ் ஈழத்தமிழர்களுக்கும் தாய் நாட்டில் வாழும் ஈழத்தமிழர்களுக்கும் விடுதலைப் புலிகள் சார்ந்த ஜனநாயக அமைப்புக்களுக்கும் மேற்படி நிகழ்வுகள் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றை ஏற்படுத்தி இருக்கின்றது.

2009 ஆம் ஆண்டு மே மாத நிகழ்வுகளுக்குப் பின்னர் புலம்பெயர் தமிழர்கள் இலங்கை அரசுக்கு எதிராகவும் ஈழ விடுதலையை நசுக்கியதற்கான நீதி கேட்டும் நடத்திய பல நிகழ்வுகளையும் அதில் பங்குகொண்டவர்களின் எண்ணிக்கையினரையும் எடுத்துக் காட்டுவதன் மூலம் ஈழத்தமிழர்களின் நாட்டுப்பற்றும் தேச விடுதலை உணர்வும் எந்த அளவிற்கு அவர்களுக்குள் ஊறிப் பதிந்து உள்ளது என்பதனை அறிய முடியும்.

புலம்பெயர் தமிழர்கள் ஒட்டுமொத்தமாகத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் சார்ந்த அமைப்புக்களுக்குப் பின்னால் செல்வதனையும் இயக்கத்தின்பால் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையையும் அறியக் கூடியதாக இருக்கும்.

எடுத்துக்காட்டாக 2009 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டமும் பாரிய நெருக்கடிக்குள் சிக்குண்ட வேளையில் ஐரோப்பிய நாடுகள், அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் வாழ்ந்த தமிழர்கள் அந்தந்த நாட்டு நாடாளுமன்ற முன்றல்களில் ஆயிரக்கணக்கில் ஒன்று கூடத் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி இலங்கை அரசு போரை நிறுத்தக் கோரியும் இலங்கை அரசுக்கு எதுவித உதவிகளும் வழங்கக் கூடாது என்றும் கோரிக்கை எழுப்பினர்.

இத்தகைய போராட்டங்கள் தொடர்ச்சியாக நான்கு ஐந்து மாதங்களாக நடந்தேறியும் இறுதியில் எதுவிதமான பலனும் கிடைக்கவில்லை. இக்கட்டுரையாசிரியர் கனடாவில் உள்ள ரொறண்ரோ நகரத்தில் இருந்த போது தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பாளர்களால் எதிர்ப்பு ஊர்வலமும் கூட்டமும் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தன.

பல்லாயிரக்கணக்கில் ஊர்வலத்தில் கலந்துகொண்ட தமிழ் மக்கள் சுமார் ஏழு மணியளவில் குயின்ஸ் பாக்கில் திரண்டனர். அந்நிகழ்வில் சுமார் ஓர் இலட்சத்திற்கும் மேலான ஈழத்தமிழர்கள் கலந்து கொண்டனர்.

குழந்தைகள், வயோதிபர்கள், பெண்கள், ஆண்கள், இளையோர் என அனைத்துத் தரப்பினரும் தமது அவலக் குரலை எழுப்பிய நிகழ்வு அங்கு வந்து இருந்த பல்வேறு இன மக்களையும் வியப்பிலும் சோகத்திலும் ஆழ்த்தியது.

ஆண், பெண் இளம் தலைமுறையினர் அங்கு அமைக்கப்பட்டு இருந்த பிரமாண்டமான மேடையில் ஆங்கிலத்திலும் தமிழிலும் பேசிய பேச்சுகள் அனைவரையும் வாய்விட்டு அழ வைத்தது.




2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாள் பாரிஸ் நகரில் இடம்பெற்ற மாவீரர் நினைவு நாள் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுவதற்கு இக்கட்டுரையாசிரியர் அழைக்கப்பட்டு இருந்தார்.

அவ்வேளையில் அப்பாரிய மண்டபம் சுமார் பத்தாயிரத்திற்கும் மேலான தமிழ் மக்களால் நிறைந்து வழிந்தது.

கொட்டும் குளிரிலும் அவ்வளவு தமிழ் மக்கள் அந்நிகழ்வில் கலந்து கொண்டமை மிகவும் வியப்பிற்கு உரியது.

மேலும் 2014 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி இலங்கை அரசின் போர்க் குற்ற நடவடிக்கைகளைத் தொடர்ந்து அமெரிக்க அரசினால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தின் முன்வைக்கப்பட்ட விசாரணை அறிக்கை விவாதத்திற்குக் கொண்டு வரப்பட இருந்தது.

அன்றையதினம் கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஈழத்தமிழர்கள் மோட்டார் வண்டிகள், பேருந்துகள், புகையிரத வண்டிகள் மூலமாகவும் ஆகாய விமானம் மூலமாகவும் ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் சென்று குவிந்து தமது எதிர்ப்பைக் காட்டினர்.

அந்நிகழ்வுக்குச் சுமார் இருபதினாயிரத்திற்கும் மேலான ஈழத்தமிழர்கள் பங்கெடுத்துத் தமது எதிர்ப்பைக் காட்டினர்.

மேற்படி குறிப்பிட்ட ஒரு சில எடுத்துக்காட்டுகள் மூலம் புலம்பெயர் தமிழர்களது நாட்டுப் பற்றையும் அரசியல் நிலைப்பாடுகளையும் பற்றி இயல்பானதொரு முடிவுக்கு வரக் கூடியதாக உள்ளது.

முதலாவதாக ஈழத்தமிழர்களின் தேசப்பற்றும் தாய்நாட்டில் வாழும் தமது உறவுகள் பற்றிய உணர்வும் தமிழ் ஈழத்தின் விடுதலையும் அவர்கள் ஒவ்வொருவர் நெஞ்சகத்திலும் ஆழமாகப் பதிந்து நிற்பதனைக் காட்டுகின்றது.

விடுதலைப்புலிகள் தமிழ் ஈழத்தில் மிகப் பலமாகவும் வெற்றிப் பெருக்கோடும் இருந்த காலகட்டத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அவர்களுக்கு வழங்கிய ஆதரவு, பங்களிப்பு என்பன ஈழ விடுதலைப் போராட்டம் வென்று தமிழ் ஈழம் மலரப் போகின்றது என்ற உணர்வின்பாற்பட்டது என்று ஒருவர் கருதலாம்.

அல்லது களத்திலும் புலத்திலும் விடுதலைப் புலிகள் பலமான செல்வாக்கும் பெற்றிருப்பதால் தாங்கள் அதற்கு ஆதரவு வழங்காது விட்டால் அதன் விளைவாகத் தமக்கு எதிர்காலத்தில் ஏதேனும் இடர்கள் வரக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாகவும் புலம்பெயர் தமிழர்களில் பலர் ஆதரவு வழங்கினார்கள் என்றும் ஒருவர் கருதலாம்.

ஆனால் 2009 மே மாதத்திற்குப் பின்னர் விடுதலைப் புலிகள் தமிழ் ஈழத்தில் மௌனித்துவிட்ட நிலையில் அல்லது இலங்கை அரசு கூறுவது போல் விடுதலைப்புலிகள் அழித்து ஒழிக்கப்பட்டு விட்டனர் என்ற நிலையில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தமது தொடர்ச்சியான பங்களிப்பையும் ஆதரவையும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் அது சார்ந்த கிளை அமைப்புகளுக்கும் தமிழ் ஈழ விடுதலைக்கும் தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எத்தனையோ அரசியல் இயக்கங்கள் மேற்கண்ட நாடுகளில் தோற்றம் பெற்றாலும் தமிழ் மக்கள் அவ்வமைப்புக்களுக்குப் பின்னால் செல்ல ஆயத்தமாக இல்லை என்பதனைப் பல்வேறு நிகழ்வுகளின் ஊடாகப் பார்க்க முடிகிறது.

குறிப்பாக அவ்வாறான அரசியல் இயக்கங்கள் ஒழுங்கு செய்யும் நிகழ்வுகளில் தமிழ் மக்கள் கலந்து கொள்வது மிக அரிதாக உள்ளது.

எனவே மேற்படி நிலைமைகளில் இருந்து தெரிய வருவதாவது, தேசப்பற்று, தேச விடுதலை என்பதற்கு அப்பால் ஒட்டுமொத்த அல்லது பெரும்பான்மையான புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் இன்று வரையிலும் அல்லாது என்றும் விடுதலைப்புலி அமைப்புக்களுக்குப் பின்னால்தான் நின்று கொண்டு இருப்பார்கள் என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது.

இதுவே தமிழ்த்தேசியத்திற்கும் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் கிடைத்த நிலையான மக்கள் ஆதரவும் வெற்றியும் ஆகும்.

மறுபுறத்தில் ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் வசதி படைத்தவர்கள் இலங்கையில் உள்ள தற்கால நிலைமையைப் பயன்படுத்தித் தமது பொருளாதார நலன்களை வளர்க்கும் பொருட்டு இலங்கை அரசுடன் இணைந்து வணிக ஒப்பந்தங்களைச் செய்து வருகின்றார்கள்.

இதனால் பல வழிகளில் பயனடைவது சிங்கள அரசேயாகும். அவர்களது நடவடிக்கைகள் தமிழ்த் தேசியத்தையும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உளவியல் மனோபலத்தையும் சீர்குலைக்கும் என்று அவர்களால் சிந்திக்க முடியவில்லை.

அவர்களின் ஒட்டுமொத்த நோக்கம் செல்வம் சேர்ப்பது என்பதால் தேசத்தைப் பற்றிய சிந்தனையும் தொலைநோக்கும் அவர்கள் சிந்தனைக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும்.

மேலும் 2009 இன் பின்னர் பல ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இலங்கைக்குப் படையெடுத்து வருவதைப் புள்ளி விபரங்களும் செய்திகளும் காட்டி நிற்கின்றன.

இதனால் இலங்கை அரசு பல கோடிக் கணக்கான அந்நியச் செலாவணியைப் பெற்று அப்பணத்தின் மூலம் இரண்டு இலட்சத்திற்கும் மேலான சிங்களப் படைக்குச் செலவு செய்து ஈழத்தை அவர்களின் கோரப் பிடிக்குள் வைத்து இருக்கின்றது.

(தொடரும்)

# உலகின் கப்பல் போக்குவரத்து கேந்திர நிலையமாக நாட்டை மாற்ற முடியும் - ஜனாதிபதி கோட்டாபய

(கொழும்பு)

**அமைவிடத்தை பயன்படுத்தி நாட்டை உலகின் முக்கிய கப்பல் போக்குவரத்து கேந்திர நிலையமாக மாற்ற முடியுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**



உலகின் வளர்ச்சியடைந்த துறைமுகங்களை முன்னுதாரணமாகக் கொண்டு நாட்டின் துறைமுக வசதிகளை அபிவிருத்தி செய்து அபிவிருத்தி இலக்குகளை துரிதமாக அடைந்து கொள்ள முடியுமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

24 ஆயிரம் கொள்கலன்களைக் கொண்டு செல்லக்கூடிய உலகின் பாரிய கப்பல்களை ஈர்க்கக் கூடிய வகையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் தேவையை அவர் சுட்டிக்காட்டினார்.

களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள் மற்றும் இயந்திரப்படகுகள் மற்றும் கப்பல் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டை அண்மித்து பயணம் செய்யும் சர்வதேச கப்பல்களுக்கு சேவைகளை வழங்கக்கூடிய வகையில் துறைமுக முறைமையை மேம்படுத்தி கொழும்பு, காலி, திருகோணமலை, காங்கேசன்துறை மற்றும் ஒலுவில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு மற்றும் மேற்கு முனையங்களின் அபிவிருத்தியை துரிதப்படுத்த வேண்டும். மீள் கப்பலேற்றல் நடவடிக்கைகளை கையாள்வதற்கான வசதிகள், களஞ்சிய வசதிகள் மற்றும் வழங்கல் வசதிகளை சர்வதேச தரத்திற்கு அபிவிருத்தி செய்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. இரத்மலானை, பேலியகொடை மற்றும் வெயாங்கொடை பகுதிகளை அண்மித்ததாக புதிய களஞ்சிய வசதிகளை ஏற்படுத்தி கொழும்பு துறைமுகத்தை ஒரு கப்பலில் இருந்து மற்றொரு கப்பலுக்கு கொள்கலன்களை மாற்றும் பரிமாற்று மையமாக மாற்றுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அரசு தலையிட்டு எரிபொருள் களஞ்சிய தாங்கிகளை நிர்மாணித்து கப்பல்களுக்கு எரிபொருள்களை வழங்க வேண்டும். பாரியளவிலான படகுகளை நிர்மாணித்ததன் பின்னர் அவற்றை ஆழ்கடலுக்கு கொண்டு செல்வதற்கு பேருவளை பிரதேசத்தை அண்மித்ததாக படகு கட்டும் நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் ஜனாதிபதி அனுமதியளித்தார்.

வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக்கொண்டு ஏற்றுமதிக்காக கப்பல்கள் மற்றும் படகுகளை பராமரித்தல், திருத்துதல், உற்பத்தியை விரிவுபடுத்தல், முக்கிய துறைமுகங்களை மையமாகக்கொண்டு கப்பல் பணிக்குழாமினரை பரிமாற்றுவதற்குத் தேவையான வசதிகளை விரிவுபடுத்த வேண்டியதன் தேவை பற்றியும் ஜனாதிபதி விளக்கினார்.

அமைச்சர். ரோஹித்த அபேகுணவர்தன, இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர, பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர ஆகியோருடன் துறைசார் அமைச்சுக்களின் அதிகாரிகள் மற்றும் துறைமுகங்களுடன் சம்பந்தப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (2-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5’2”<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. கடையில் வேலை செய்கின்றார்.<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/7602 | பிறப்பு: 1987 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1<br>கி.பா: 17 ¼ செவ் 10 இல்<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்: **B.Sc, M.Sc.** ஆராய்ச்சி உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகன்.<br>தொ.இ: G/5391 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: செவ் 9இல் உயரம்:5’5”<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. சொந்த மில் வைத்திருக்கின்றார். தனியார் சாரதி.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/7611 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>கி.பா:58 செவ் 1இல் உயரம்: 5’4”<br>தகைமை/தொழில்: **B.Sc, Project Officer (Private)**<br>எதிர்பார்ப்பு: தனியார் வங்கி, அரச உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி மணமகன்<br>தொ.இ: G/9196 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:பூராடம் 1<br>கி.பா: 54 ¾ சூரி,செவ் 2 இல்<br>உயரம்: 5’3”<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. அரச உத்தியோகத்தர்.<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் உள்ள பெண்<br>தொ.இ: B/7614 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா:சூரி, செவ்12இல் உயரம்: 5’3”<br>தகைமை/தொழில்: **MBBS, Doctor**<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், விரிவுரையாளர், கணக்காளர்,<br>தொ.இ: G/9203 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 15 சூரி,செவ் 3 இல்<br>தகைமை/தொழில்: **MBBS, Doctor.**<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/7617 | பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: பூரம்<br>கி.பா:29 ¾செவ் 9இல் உயரம்: 154cm<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும். மணமகள் கணவனை இழந்தவர்<br>தொ.இ: G/9211 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**


# மழையுடனான வானிலை மேலும் அதிகரிக்கும்

(கொழும்பு)

நாட்டில் நாளை 18 ஆம் திகதி முதல் மழையுடனான வானிலை மேலும் அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று பிற்பகல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

மேலும், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழையுடனான வானிலை காணப்படுமெனவும் ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பிற்பகல் வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாகவும் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது 50 கிலோமீற்றர் வேகத்தில் காணப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)



**கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, கட்டடப் பொருட்கள், தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த வவுனியாவிற்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள வீட்டுத் திட்ட பிரச்சினைகள் தொடர்பில் வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட பணிப்பாளர் திருமதி.வீ.குரூஸ் மற்றும் வீடமைப்பு திணைக்கள உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடினார். குறித்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் வவுனியா தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்தில் இடம்பெற்றது.**

(படம்: குருமன்காடு செய்தியாளர்)

# வெளிநாட்டவர்களை அழைத்து வருவதை குறைக்க தினம் ஒரு விமானத்திற்கே அனுமதி

(கொழும்பு)

**கொரோனாப் பாதிப்புக் காரணமாக வெளிநாடுகளில் பல கஷ்டங்களுக்கு மத்தியில் தங்கியிருக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கொவிட்-19 வைரஸ் தடுப்பு தேசிய செயற்பாட்டு நிலையத்தின் பிரதானியான இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.**



நாட்டிற்கு அழைத்து வரப்படும் இலங்கையர்கள் மத்தியில் கொரோனா வைரஸ் தொற்றியவர்கள் அதிகரித்து இருப்பதே இதற்கு காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரே நேரத்தில் அதிகளவான தொற்றாளர்கள் நாட்டுக்குள் வருவது ஆபத்தானது. இதன் காரணமாக கொரோனா வைரஸ் மீண்டும் சமூகத்தில் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தினமும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை வரும் ஒரு விமானத்திற்கு மாத்திரம் அனு .மதி வழங்குவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் கொரோனா வைரஸ் மீண்டும் சமூகத்திற்குள் பரவும் ஆபத்து இருப்பதாக சுகாதாரத் துறையினர் மீண்டும் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# கனரக வாகன சாரதி உரிமங்களுக்கு சிறுநீர் பரிசோதனை கட்டாயம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

கனரக வாகனம் அல்லது வணிக வாகன சாரதி உரிமங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் மது அல்லது மது அல்லாத போதைப்பொருட்களைப் பயன்படுத்துகிறார்களா? என்பதை கண்டறிய சிறப்பு சிறுநீர் பரிசோதனை கட்டாயமாக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இதனை தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர் ஏதேனும் அல்கஹோல் உட்கொண்டுள்ளாரா? என்பதை அறிய சோதனைச் சாவடிகள் அல்லது வீதித் தடைகளில் தற்போது மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு நபர் அல்கஹோல் அல்லாத போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தால் சாதாரண அல்கஹோல் சோதனைகள் வெளிப்படுத்தாது.

எனவே, சிறப்பு சிறுநீர் பரிசோதனை மேற்கொள்ளப்படும்" என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினார். (ஜ-4)





லசி



பிச்சை எடுப்பதை விட மிகவும் கொடுமையானது... நம் மனதுக்கு பிடித்த ஒருவரின் அன்பை கேட்டுப் பெறுவது...

திவ்யா



தலைகீழாக நின்று காரியம் சாதித்து கொள்ளும் ஒரு ஜீவன் வௌவால்

கயன்



மீன்கள் நீந்தும் உன் அகத்தில் என் கண்கள் துடிக்கிறது பெண்ணே உன்னிடம் சரணடைய...!

விதுசா



தனக்கு விருப்பமான பெண் வீதியை கடந்து செல்கையில் தன் விருப்பத்தை தெரிவிக்க காத்திருக்கும் ஆண்களின் நாணம் பேரழகு...!!!

தினேஷ்

இந்த உலகத்துல நமக்குன்னு இருக்குறது நம்ம உயிர் மட்டும்தான். இது இருக்கிற வர சந்தோஷமா வாழ்ந்திட்டு போயிடனும்

சந்துரு



பல கோடி சொத்துக்களுடன் வாழ்பவனை விட மன நிம்மதியுடன் வாழ்பவனே உண்மையில் பெரும் செல்வந்தனாய் இருக்கிறான்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை வேறு பணியில் ஈடுபடுத்தத் தீர்மானம்

(கொழும்பு)

வீதி விதிமுறைகள் தொடர்பில் பதாகைகளை காட்சிப்படுத்தும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை நீக்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அவர்களை வேறு பணிகளில் ஈடுபடுத்துமாறு மேல் மாகாண போக்குவரத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் பொலிஸ் போக்குவரத்து பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்காக முன்னுரிமை பாதை விதிமுறை ஒத்திகையானது நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் கொழும்பிற்குள் நுழையும் அனைத்து மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஆட்டோக்கள் வீதியின் இடது பக்கத்தில் மட்டுமே செலுத்துவதற்கான ஒத்திகை நேற்று நடைபெற்றது. (ஜ-4)



# ஆன்மீகம்

## இனிய உறவுகள் இற்றுப்போகலாமா?



அம்மா, அப்பா, மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, தாத்தா, பாட்டி, சகோதரன், சகோதரி என்ற உறவு வட்டத்திற்குள் வலம் வந்த பல குடும்பங்கள் இப்போது வெறிச்சோடி காணப்படுகின்றன. கூட்டுக் குடும்ப வாழ்க்கை இன்றைய அவசர கதியிலும் பொருளாதாரச் சூழலிலும் அதி நவீன நாகரிகப் போக்கிலும் காணாமல் போய்விட்டது. கணவன், மனைவி, அவர்களின் ஒரு குழந்தை அல்லது இரு குழந்தைகள் கூடி வாழும் குடும்பத்திலும் பெரும்பாலும் அந்நியோன்னியமோ, பரஸ்பர அன்போ, பரிமாறுதலோ, விட்டுக்கொடுத்தலோ இல்லாமல் வீட்டின் நான்கு அறைகளில் அறைக்கு ஒருவராகப் போய் அனைவரும் அடைந்து கொள்கின்றனர். ‘தனிமை கண்டதுண்டு - அதிலே சாரம் இருக்குதம்மா!’ என்று பாரதி பாடினாலும் தன்னலம் கருதி ஓட்டுக்குள்ளே தன்னை ஒடுக்கிக் கொள்ளும் நத்தைகளாக வாழ்வதையே பலர் நாகரிகமாகக் கருதுகிறார்களே!

‘பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோர் பிணமாகச் சாய்ந்து அவர்கள் உடம்பில் ஈ மொய்க்கத் தொடங்கும் போது கூட ‘ஈ மெயிலில்’ தானே மொய்த்துக் கிடக்கின்றன மைந்தர்களின் விழிகள்?’ என்று கோபாவேசமாகக் குரல் கொடுக்கிறார் ஒரு கவிஞர். அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, உறவுகள் விரிசல் விடுவதற்கு அபிப்பிராய பேதம், பொருளாதாரப் பிரச்சினைகள்தான் காரணம் என்று சிலர் சொல்கிறார்கள். அது சரியா, தவறா? என்று மற்றவர்களால் ஆராய முடியாது.

ஆனால், தாய்,தந்தையரையே தனியாகத் தவிக்க வைத்து விடுகிறார்களே! ஜீரணிக்க முடியாத நிஜம்தானே இன்றைய இத்தகைய நடப்புகள்!

‘பற்றுக பற்றற்றான் பற்றினை!
அப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு’

என்ற திருக்குறள் நெறிப்படி அனைத்து உறவுகளையும் அறுத்து உதறி விட்டு ஆண்டவனையே ‘சிக்’கெனப் பற்றிய துறவியர்கள், ஆதிசங்கரர், பட்டினத்தார் போன்றோர். ஆனால், எல்லா பந்தங்களையும் நீக்கிய அவர்களால் கூட தாய்ப்பாசத்தைத் தள்ளி வைக்க முடியவில்லை. புலம்புகிறார் பட்டினத்தார்: ‘வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் கட்டிலிலும் வைத்து என்னைக் காதலித்த தாய்க்கு, அரிசியோ நான் இடுவேன்...

விறகில் இட்டு தீ மூட்டுவேன்... சிறந்த துறவி’என்று பலராலும் புகழப்பட்ட பட்டினத்தாருக்கே தாயின் பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால், வாழும் போதே பெற்றோரை முதியோர் இல்லத்தில் முனகச் செய்கின்றனர் இன்றைய ‘பட்டினத்தார்கள்.’

‘இவர்கள் நாயிடம் காட்டும் விசுவாசத்தைக் கூட பெற்ற தாயிடமும், தந்தையிடமும் காட்டவில்லையே!’ என்றும் ‘கோழி மிதித்து குஞ்சு முடம் ஆகாது. ஆனால், குஞ்சுகள் மிதித்து கோழி முடமாகிவிட்டதைக் குறிப்பிடுவதே முதியோர் இல்லங்கள்’ என்றும் இன்றைய கவிஞர்கள் பலர் இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள். கம்பன் கண்ட ராமன், கானகத்திற்குச் சென்ற பின்பும், ‘குகனோடும் ஐவர் ஆனோம் குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனோம்!’ என்றும், ‘விபீஷணா! உன்னுடன் நான்கு பேராக இருந்த தசரதனின் புதல்வர்கள் ஏழுபேராகி உயர்ந்து விட்டோம்,’ என்கிறார்.

(தொடரும்...)

# செய்தித்துளிகள்

## மத்திய கிழக்கிலிருந்து 656 பேர் நாட்டிற்கு

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து 656 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர். அதன்படி ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 371 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 4.20 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் ஜோர்தானின், அம்மானிலிருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான யு.எல் -1506 என்ற விமானத்தில் 285 இலங்கையர்கள் நேற்று முன்தினம் இரவு 9.10 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளும் பி.சி.ஆர்.சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தலுக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். (ஜ-4)

## மின்சாரம் தாக்கி மாணவன் பலி

(கொழும்பு)

மின்சாரம் தாக்கி காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மாணவன் உயிரிழந்தான். தியத்தலாவை - அலுத்வெல பகுதியைச் சேர்ந்த 15 வயது மாணவனொருவரே இவ்வாறு உயிரிழந்தான்.

தியத்தலாவை ஆரம்ப வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த தியத்தலாவை -அலுத்வெல தெற்கு பாடசாலையில் 10 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவனே இவ்வாறு உயிரிழந்தான். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 150 | 110 | 140 | 200 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 90 | 110 | 80 |
| கோவா | 120 | 130 | 140 | 140 |
| கரட் | 80 | 170 | 180 | 200 |
| பூசணி | 100 | 120 | 120 | 140 |
| புடோல் | 100 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 130 | 140 | 180 |
| பெரிய வெங்காயம் | 170 | 150 | 150 | 180 |
| பாகற்காய் | 350 | 300 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 150 | 140 |
| பயற்றங்காய் | 140 | 200 | 120 | 120 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 85 | 90 | 100 |
| கறிமிளகாய் | 250 | 320 | 280 | 320 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 280 | 200 |
| போஞ்சி | 300 | 300 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | -- | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 25 | 30 | 40 |
| தேசிக்காய் | 100 | 160 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 250 | 240 | 180 | 280 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 80 | 50 | 80 |



# சிறுவர் அரங்கம்

## வியாபாரியின் கதை

ஒரு ஊரில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் நன்றாக உழைத்து பணத்தைச் சேர்த்தான். அதனால் அவனுக்கு பண ஆசை அதிகரித்து மனநிம்மதி போய்விட்டது.

ஒருநாள் இரவு திடீரென்று அவனுக்கு ஓர் யோசனை தோன்றியது. சந்நியாசியாகி விட்டால் மனநிம்மதி கிடைக்கும் என்று முடிவெடுத்தான்.

மறுநாளே தன்னிடமிருந்த பணத்தையெல்லாம் ஒரு துணியில் மூட்டையாகக் கட்டிக் கொண்டு ஊரை விட்டு காட்டுக்கு வந்தான்.

அங்கே ஒரு சந்நியாசி தவம் செய்து கொண்டிருந்தார். அவரிடம் பல சிஷ் யர்கள் தொண்டு செய்து கொண்டிருந்தனர்.

அவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதைப் பார்த்து வியாபாரி, அந்தக் குருவை வணங்கி சாமி நான் ஒரு வியாபாரி. சம்பாதிக்க சம்பாதிக்க பண ஆசை நாளுக்கு நாள் அதிகரித்தது.


மனநிம்மதி போய்விட்டது. நான் சேர்த்த பண மூட்டையைப் பெற்றுக் கொண்டு என்னையும் சிஷ்யனாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பணிவாகக் கேட்டான்.

அவன் கீழே வைத்த பண மூட்டையை அந்தக் குரு எடுத்துக் கொண்டு திடீரென்று ஓட ஆரம்பித்தார். வியாபாரிக்கு ஒன்றும் புரியவில்லை.

அவனும் அவருக்குப் பின்னே ஓடினான். அவன் தன் பின்னால் ஓடிவருவதைக் கவனித்த குரு இன்னும் வேகமாக ஓட ஆரம்பித்தார்.

வியாபாரியும் ஐயோ என் பணமூட்டை... என்று கத்திக் கொண்டே அவர் பின்னால் ஓடினான்.

குரு பணமூட்டையுடன் வெகுதூரம் சென்றுவிட்டு பிறகு மீண்டும் அவரது இடத்திற்கே வந்து பணமூட்டையை அதே இடத்தில் வைத்துவிட்டு மீண்டும் சலனமில்லாமல் அமர்ந்து கொண்டார்.



நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு வியாபாரியும் குருவிடம் வந்தான். தனது பண மூட்டை இருப்பதைப் பார்த்து குழம்பிப்போனான்.

குரு அவனைப் பார்த்து மகனே இன்னும்பண ஆசை உன்னைவிட்டுப் போகவில்லை. அதனால் நீ மீண்டும் வியாபாரம் செய்.

எனது ஆசிரமத்தில் உனக்கு இப்போதைக்கு இடமில்லை சென்று வா... என்று சாந்தமாக உப்தேசம் செய்தார். வியாபாரி தனது பண மூட்டையுடன் ஊர் திரும்பினான்.

**நீதி:**

**அளவோடு சம்பாதித்தால் மனநிம்மதியுடன் இருக்கலாம்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்

ஆரியம் என்கிற வட மொழிப் பாடலைப் பாடும் பொறுப்பு அம்பலநாதனிடம் தரப்பட்டிருந்தது.


இவர் தம்மோடு இருவரை இணைத்துக்கொண்டு ஆரியம் பாடினர். ஆரியம் பாடிய்வர்களுக்கும் தலைக்கு ஒன்றரை வேலி நிலம் அளிக்கப் பட்டது.

குராவன் வீரசோழனான பஞ்சவன் மாதேவி நாடகமாராயன், மறைக்காட்டுக் கணவதியான திருவெள்ளறைச் சாக்கை, ஒற்றியூரைச் சேர்ந்த சிங்கன், இளங்கோவன் ஆகிய நால்வரும் பெரிய கோயிலில் கொட்டுப் பாட்டுப் பாடியவர்கள்.

பெரிய கோயிலில் திருப்பதிகம் பாட நாற்பத்தெட்டுப் பிடாரர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார்கள்.

காந்தர்வர் எனப்படுபவர் வானலோகத்தைச் சேர்ந்தவராகவும் அவருடைய பாடல் கந்தர்வர் இசையாகவும் கருதப்பட்டது.

70



அணுக்கன் திருவாயில்

சோழர் காலத்தில் தமிழ் நாட்டின் பல கோயில்களில் காந்தர்வர் பாடும் பணியிலிருந்தார்கள். பெரிய கோயிலில் இருபது காந்தர்வர்கள் பணியில் இருந்தார்கள்.

இவர்களுக்குத் தஞ்சாவூர்ப் புறம்படிப் பகுதியில் காந்தர்வத் தெரு அமைத்துத் தரப்பட்டது.

பெரிய கோயிலின் இசை சங்கமத்தில் குழல், உடுக்கை, இலைத்தாளம், கொட்டி மத்தளம், கின்னரம், பறை, மொராவியம், வங்கியம், பாடவியம், வீணை, முத்திரைச்சங்கு, சகடை என பல வாத்தியக் கருவிகள் பயன்படுத்தப் பட்டன.

இப்படி ஆலயத்தில் பாடுவதற்கும் உடன் வாத்தியம் வாசிப்பதற்கும் நடனமிடுவதற்கும் இந்தக் கலைஞர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் என அனைத்தும் விளக்கமாகக் கல்வெட்டுக்களில் பொறிக்கப் பட்டுள்ளன.

**நாட்டியம்**

ஆடற்கலைக்கு மூலமுதல்வன், சிவபெருமான் எனும் ஆடல்வல்லான். பரதக் கலைக்கு அடிப்படையாகத் திகழ்வது நூற்று எட்டு கரணங்கள். சிவபெருமான் முதல் முதலில் கரணங்களைப் போதித்தது புராண வரலாறு.

இறைவனுக்கு நடத்தப்படும் 16 வகை வழிபாடல்களுள் நாட்டியமும் ஒன்று. நாட்டியக் கலைக்கு ராஜராஜன் செய்த தொண்டு போற்றுதலுக்குரியது.

கோயில் கருவறையில் 81 நாட்டியச் சிற்பங்களை இடம்பெறச் செய்தார் ராஜராஜன்.

தஞ்சைப் பெரிய கோயிலில் நாட்டியக் கலை மிக மேன்மையாக வளர்க்கப் பட்டிருக்கிறது. கோயிலில் தினமும் வாத்திய இசையோடு கூடிய நாட்டியம் எனும் ஆடற்கலை ஈசனுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. நாட்டியத்துக்காக நானூறு ஆடல் மகளிர் பணியில் அமர்த்தப்பட்டனர்.

(தொடரும்)

கடவுள் மனிதர்களிடம் இன்னும் நம்பிக்கையை இழக்கவில்லை. ஒவ்வொரு குழந்தையின் பிறப்பும் இதைத்தான் உணர்த்துகிறது.
- ரவீந்திரநாத் தாகூர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நிலை தடுமாறாத நெஞ்சுக்கு நீதி

இறைவன் உனக்குத் தர நினைத்ததை எந்த மனிதனாலும் தடுத்து விட முடியாது.

இறைவன் உனக்குத் தர நினைக்காததை எந்த மனிதனாலும் தந்துவிட முடியாது.

இந்தத் தத்துவத்தின்பால் நாம் கவனம் செலுத்துவோம்.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தனது 79ஆவது வயதில் புதிய கட்சியை ஆரம்பித்து 80ஆவது வயதில் பாராளுமன்ற உறுப்பினரானார்.

இந்த வயதில் கட்சி ஆரம்பித்து தேர்தலில் நின்று அதில் வெற்றியும் பெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்றத்தில் ஆற்றிய முதலாவது உரை அவரை நோக்கி சர்வதேச சமூகத்தைத் திருப்பியுள்ளது.

கட்சித் தலைவர் என்ற வகையில் பாராளுமன்றத்தில் நீதியரசருக்கு முன் ஆசனம் வழங்கப்பட்டது.

இதன்வழி; சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட மகிந்த யாப்பாவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கின்ற சந்தர்ப்பம்.

வாழ்த்துத் தெரிவிக்கின்ற சந்தர்ப்பத்தை தக்கமுறையில் பயன்படுத்துவதெனத் தீர்மானித்த நீதியரசர் விக்னேஸ்வரன்,

சபாநாயகரைப் பார்த்து, இந்த நாட்டின் மூத்த குடிகளின் தாய் மொழியாகிய தமிழால் உங்களை வாழ்த்துகிறேன் என்றார்.

இலங்கை மண்ணின் மூத்த குடிகள் தமிழர்கள் என்பதை தனது முதலாவது உரையில் விக்னேஸ்வரன் பாராளுமன்றத்தில் கூறியமை தமிழ் மக்களுக்கு மன ஆறுதலையும் தேறுதலையும் தந்தது.

நம் புலம்பெயர் உறவுகள் நீதியரசரின் உரை கண்டு வியந்தனர்.

ஐயா! நீங்கள் பாராளுமன்றம் சென்றதால் பெறுவோம் உய்வு என தங்கள் மனப் பதிவுகளை முகநூல்களில் அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

நிலைமை இதுவாக இருக்க, இன்னுமொரு கண்டம் கடந்தாக வேண்டும் என்பது விக்னேஸ்வரனின் விதியாயிற்று.

கண்டத்தை எப்படிக் கடப்பது என்றால், அதனை அண்டம் கடந்தவன் பார்த்துக் கொள்வான் என்று அவர் கூறிக் கொண்டார்.

ஏலவே நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு எதிரான வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டும் என்றும் அவ்வாறு வழக்கை விசாரித்தால், நீதியரசர் விக்னேஸ்வரனுக்குத் தண்டனை கிடைப்பது உறுதி என்றும் அஃது அவரைப் பாராளுமன்றம் செல்ல அனுமதிக்காது என்றும் நினைத்து தீர்ப்பை விரைவுபடுத்துமாறு கேட்டவர்கள் தோற்கும் வகையில்,

அன்றைய சூழலை அணுவுக்குள் அணுவாய் இருக்கும் அவன் ஆக்கிக் கொண்டான்.

இப்போது என்ன செய்ய முடியும். முதல் உரை மூத்த தமிழ்க்குடி என்பதாக அமைய,

ஐயா! உங்களுக்குப் பக்கபலமாக நான் இருப்பேன் என்று கூறி வழக்கை வாபஸ் பெறுவதுதானே டெனிஸ்வரனுக்கான ஒரே வழி.

ஆக, இப்போது இதன் தொடக்கத்தை திரும்பி வாசியுங்கள். உண்மைத் தத்துவம் புரியும்.

## 20 ஆவது திருத்தம் குறித்து

# மிச்செல் பச்லெட்டின் கருத்து அனுமானத்தின் அடிப்படையிலானது

**(கொழும்பு) முன்மொழியப்பட்ட 20ஆவது திருத்தம் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட்டின் கருத்துக்கள் தேவையற்றவை என்பதுடன் அது அனுமானத்தின் அடிப்படையிலானவை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 45ஆவது அமர்வில் நிகழ்ச்சி நிரல் இரண்டின் கீழான பொது விவாதத்தின்போது ஜெனீவாவில் ஐ.நா.வின் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதி தயானி மெண்டிஸ் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அளித்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில்,

அரசியலமைப்பில் முன்மொழியப்பட்ட 20 ஆவது திருத்தம் தேசிய மனிதவுரிமைகள் ஆணையம் உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களின் சுதந்திரத்தை எதிர்மறையாக பாதிக்கும் என உயர்ஸ்தானிகர் மைக்கேல் பச் லெட்டின் கடந்த திங்கட்கிழமை தெரிவித்திருந்தார்.

பாராளுமன்றத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் ஒரு முழுமையான ஜனநாயக வழிமுறையைத் தொடர்ந்து விவாதிக்கப்படும். அங்கு அனைத்து உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை முன்வைக்க வாய்ப்புக் கிடைக்கும்.

மேலும், இவ்வாண்டு பெப்ரவரியில் இலங்கை 30/1 தீர்மானத்தின் இணை அனுசரணையிலிருந்து விலகியதால் புதிய அரசாங்கம் ஐ.நா. சபைக்கு அளித்த உத்தரவாதங்கள் குறித்து உறுதியுடன் உள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்ட விரோத கொலைகள் தொடர்பாக நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாய்க்கு கடந்த மார்ச் மாதத்தில் வழங்கப்பட்ட மன்னிப்பு, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூத்த இராணுவ அதிகாரிகள் முக்கிய சிவில் திணைக்களங்களில் நியமிக்கப்படுதல் போன்றவை குறித்தும் மிச்செல் பச்லெட் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில், மூத்த இராணுவ அதிகாரிகள் அரச நிறுவனங்களின் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்கு எதிராக பொய்யான மற்றும் ஆதார மற்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாக ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## சின்மயானந்தரின் சிந்தனையிலிருந்து

### மனக்கருவியைப் பராமரியுங்கள்

❖ வைராக்கியமும் விவேகமும் பெற்ற மனிதர்கள் எல்லாரும் நல்ல பாதையைத் தேர்ந்தெடுத்து, மனித இனத்திலுள்ள மற்றவர்களை நிரந்தரமான சாந்திக்கும் ஆனந்தத்திற்கும் அழைத்துச் செல்கிறார்கள்.

❖ மனிதர்களின் பிறப்புரிமையான நிறைவிலும் சந்தோஷத்திலும் வாழக்கூடிய ஒரு முழுமையான, அமைதியான அரசாங்க முறையை கண்டுபிடிப்பதில், எந்த ஒரு யுத்தமோ, புரட்சியோ வெற்றியடையவில்லை.

❖ வாழ்க்கையில் ஒவ்வொரு அனுபவமும் அனுபவிப்பவர், அனுபவிக்கப்படும் பொருள், இவ்விரண்டிற்குமுள்ள அனுபவம் என்ற மூன்று முக்கிய பிரிவுகளைக் கொண்டது ஆகும்.

❖ வாழ்க்கையில் இன்பமான அனுபவங்களை அடைய அகத்தையும், புறத்தையும் பக்குவப்படுத்த வேண்டும்.

❖ அனுபவங்களின் அடுக்குத் தொடர்ச்சியே வாழ்க்கை எனப்படும். ஒரு செங்கல் சுவரின் ஒரு பகுதி ஆவதுபோல, ஒரு அனுபவம் வாழ்க்கையின் ஒரு பகுதி ஆகிறது.

❖ வாழ்க்கையின் இடையூறுகளுக்கு விடை நம்முடைய அனுபவங்களை சீர் செய்வதில் இருக்கிறது.

❖ ஆரோக்கியமான புத்திபூர்வமான வாழ்க்கைக்கு மதநூல்கள் சந்தேகமின்றி நமக்கு வழிகாட்டுகின்றன. ஆனால், நம்முடைய முழு முயற்சியும், மன உறுதியுமே அதை அடைய நமக்கு உதவ முடியும்.

❖ மனிதனின் மனம் ஒரு கருவிதான். தான் தொடர்பு கொள்ளும் பொருள்களால், இன்பத்தையோ அல்லது துன்பத்தையோ அனுபவிக்கிறது. இந்தக் கருவி சரியாக இருந்தால் மனிதன் வாழ்க்கையில் ஒரு லயத்தையும் இனிமையையும் அனுபவிக்கிறான். ஆனால், இந்தக்கருவி கவனிப்பாரின்றி உபயோகப் படுத்தப்படாமல் கிடந்தால் குழப்பம் எழுகிறது.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நம்பிக்கை இழக்காதே. அவநம்பிக்கையானது அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றுக்கு வீழ்ச்சியாகும். -டாக்டர் அம்பேத்கர்

## சத்திய தரிசனம்

### அன்புடன் வாழ்வோம்



❖ தவறான வழியில் செல்லும் உலகத்தை, நல்வழியில் திருப்பிவிட முயற்சி செய்யுங்கள்.

❖ நிலையாகவும், உண்மையாகவும் இருப்பவர்கள் தங்க ளது இலக்கை வெகு விரைவாக அடைகிறார்கள்.

❖ வாழ்க்கை என்னும் வாகனத்திற்கு இதயமே சாவியாக இருக்கிறது. அதை, கடவுள் என்னும் ஓட்டுநர் இயக்குகிறார்.

❖ உங்களை விரிவுபடுத்திக்கொண்டே இருங்கள். அதைவிட்டு, சிறிய வட்டத்திற்குள் நின்றுகொண்டு உழலாதீர்கள்.

❖ உண்மையாக உழைத்துக்கொண்டிருக்கும் மனிதனுக்கு, என்றும் சோகம் வருவதில்லை.

❖ அன்புடன் வாழுங்கள். அன்பை பரவச் செய்யுங்கள்.

❖ இறைநாமத்தை நம்பி, அவரை வழிபடுபவர்க்கு, கடவுள் உற்ற தோழனாகவும், வழி நடத்தும் பாதுகாவலராகவும் இருக்கிறார்.

❖ உங்களை இறைவனிடம் முழுமையாக ஒப்படைத்துவிட்டால், அவர் உங்களை எந்த நேரத்திலும் தொடர்ந்து காத்துக் கொண்டிருப்பார்.

# யாழ். கிரிக்கெட் சம்பியன்- 2020 ஜொனியன்ஸ் இறுதிக்கு தெரிவு

யாழ்.கிரிக்கெட் சம்பியன் 2020 தொடரின் 2 ஆவது அரை இறுதிப் போட்டி கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணி ஓல்ட்கோல்ஸ் அணியை 34 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 30.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது. போட்டியில் அன்புஜன் 34, சௌமிகன் 14, சன்சயன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். களத் தடுப்பில் ஓல்ட்கோல்ஸ் அணியின் ஜிந்துஸன், விதாகன் 3 விக்கெட்டுக்களையும் நிரோஸன், கஜேந்திரன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 26.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

போட்டியில் நிரோஸன்-17, சிறிகுகன்-28 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் யாழ். ஜொனியன்ஸ் அணியின் சன்சயன், பிருந்தா-3, லவேந்திரன்-2, அபிநாஸ்-1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற யாழ்.ஜொனியன்ஸ் அணி நாளை மறுதினம் சனிக்கிழமை கே.சி.சி.சி,யாழ்.சென்றல் அணிகளுக்கிடையே நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் இறுதிப் போட்டியில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)



# மன்கட் முறைக்கு ஆட்டமிழப்பு வழங்க வேண்டாம்- முரளி



மன்கட் முறையில் துடுப்பாட்ட வீரர்களை பந்து வீச்சாளர்கள் ஆட்டமிழக்கச் செய்வது நன்றாக இருக்காது என்று முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "பந்து வீச்சாளர்கள் துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்குவதில் நியாயமற்ற தன்மை இருக்கக் கூடாது.

துடுப்பாட்ட வீரர்கள் முதலில் எச்சரிக்கை கொடுக்க வேண்டும். பந்து வீச்சாளர் அல்லது துடுப்பாட்ட வீரர்கள் தவறு செய்கிறார் என நடுவர் தீர்மானித்தால், தவறும் செய்யும் அணிக்கு 5 ஓட்டங்களை தண்டனையாக வழங்கலாம்" என்று தெரிவித்துள்ளது.

பஞ்சாப் அணியின் தலைவராக ரவிச்சந்திரன் அஸ்வின் இருந்த போது மன்கட் முறையில் அவர் பட்ஸ்மேனை ஆட்டமிழக்கச் செய்தமை கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

ஆனால் கிரிக்கெட்டில் மன்கட் விதிகளுக்கு உட்பட்டது, அதில் எந்தத் தவறும் இல்லை. நடப்பு ஐ.பி.எல். தொடரிலும் மன்கட் முறையில் நான் துடுப்பாட்ட வீரர்களை அவுட் செய்வேன் என்று அஸ்வின் கூறியுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் சுழற் பந்துவீச்சாளர் ஐ.பில்.எல். தொடரில் ஆரம்பத்தில் சென்னை அணிக்காகவும் பின்னர் பெங்களூர் அணிக்காகவும் தற்போது பந்துவீச்சு ஆலோசகராக சன்ரைசர்ஸ் அணியில் தற்போது உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# நொதேன் பிறீமியர் லீக்- 2K20

## கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டிகள்




- இனுவில் யுனைடெட் ஸ்ரார்ஸ் எதிர் சாவா ஸ்பாட்டன்ஸ்.
- இனுவில் யுனைடெட் - 72/7.
- சாவா ஸ்பாட்டன்ஸ்- 44/10.
- இனுவில் யுனைடெட்-28 ஓட்டங்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - மோகன்ராஜ்-4 விக்கெட்டுக்கள்.



- வட ஸ்ரைக்கர்ஸ் எதிர் இனுவில் யுனைடெட்.
- இனுவில் யுனைடெட் - 81/6.
- வட ஸ்ரைக்கர்ஸ் - 85/5.
- வட ஸ்ரைக்கர்ஸ் 5 விக்கெட்டுக்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - சேந்திரன்-23 ஓட்டங்கள்.



- வட ஸ்ரைக்கர்ஸ் எதிர் யாழ். அரோஸ்.
- வட ஸ்ரைக்கர்ஸ் - 38/10.
- யாழ்.அரோஸ் - 41/4.
- யாழ்.அரோஸ் 6 விக்கெட்டுக்கள் வெற்றி.
- ஆட்ட நாயகன் - ஜெனி-3 விக்கெட்டுக்கள்.



- சங்கானை றொப் 11 எதிர் யாழ். அரோஸ்.
- யாழ்.அரோஸ் - 68/6.
- சங்கானை றொப் - 11-69/01.
- சங்கானை றொப் 11 9 விக்கெட்டுக்கள் வெற்றி.
- ஆட்ட நாயகன் - சதீஸ்-46 ஓட்டங்கள்.

## எச்சரிக்கையின்...

பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் உள்ள சிறீசபாரத்தினத்தின் நினைவிடத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கோப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சிவாஜிலிங்கம் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி 2 இலட்சம் ரூபாய் ஆட்பிணையில் விடுதலை செய்துள்ளார்.

சிவாஜிலிங்கத்திற்கு சார்பாக, சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா, வி.மணிவண்ணன், க.சுகாஷ், திருக்குமரன் உள்ளிட்ட எட்டு சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர். (ம-3,8,101)

## விக்னேஸ்வர...

முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் மீது தொடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்பில் மனம் வருந்துவதாக முன்னாள் வட மாகாண அமைச்சர்.டெனீஸ்வரன் வருத்தம் தெரிவித்துள்ளரர்.

குறித்த வழக்கு விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இரண்டாவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்த போது, எந்தவித நிபந்தனைகளும் இன்றி வழக்கை கைவாங்குவதாக முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தரப்பில் கூறப்பட்டதை அடுத்து மேன் முறையீட்டு நீதிமன்றம் குறித்த வழக்கை முடித்து வைத்திருந்தது.

இந்நிலையில் முன்னாள் வடமாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் இவ்வாறு மனம் வருந்துவதாக பதிவிட்டுள்ளார்.

நீதிமன்ற வளாகத்தில் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுடன் கைலாகு கொடுக்கும் புகைப்படத்தை பகிர்ந்து "அன்புக்குரிய நீதியரசர் அவர்களே! தங்களுடைய மனம் நோகும்படியாக நான் நடந்திருந்தால், அதன்பொருட்டு மனம் வருந்துகிறேன்...... அன்புடன்டெனீஸ்' என குறித்த பதிவில் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## டெனீஸ்வர...

"இது ஒரு துன்பியல் சம்பவம். இரு தரப்பாருக்கு இடையே புரிந்துணர்வு இல்லாமையால் இதுவரையில் இவ்விடயம் தாமதிக்கப்பட்டு வந்துள்ளது" என வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

டெனீஸ்வரன் தொடர்ந்த வழக்கு நேற்று நண்பகல் முடிவுகள் வந்தபின்னர் நீதிமன்ற வளாகத்தில் காத்திருந்த ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

"மாகாண சபையில் தொடங்கிய டெனீஸ்வரனுடனான இந்தப் பிரச்சினை நீதிமன்றம் சென்றது குறித்து என்ன சொல்கின்றீர்கள்?" என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"இது ஒரு துன்பியல் சம்பவம். அதாவது, இரு தரப்பாருக்கு இடையே புரிந்துணர்வு இல்லாமையால் இதுவரையில் இவ்விடயம் தாமதிக்கப்பட்டு வந்துள்ளது.

அண்மையில் நான் கதிர்காமத்தில் இருந்த போது, டெனீஸ்வரன் தொலைபேசியூடாக என்னை அழைத்தார். அப்போது நான் அவருடன் பேசியபோது ஒரு விடயத்தை அறிந்து கொண்டேன்.

தன்னை குற்றவாளியாக நினைத்து அமைச்சர் குழாமிலிருந்து நான் அவரை வெளியேற்றியதாக அவர் நினைத்திருந்தார்.

ஆனால், அவரை வெளியேற்றியமைக்கான காரணம் அவர் சம்பந்தமாக முறைப்பாடு செய்த ஒருவர் அமைச்சரவையில் அப்போது இருந்தார்.

குற்றம் சுமத்தியவரையும், குற்றம் சுமத்தப்பட்டவரையும் அமைச்சரவையில் வைத்திருத்தல் உசிதம் இல்லை என்ற காரணத்தினால்தான் நான் அவரை பதவியிலிருந்து நீக்கினேன் என்ற விடயத்தை அவருக்கு அறியப்படுத்தினேன்.

அதன்பின்னர் பல சம்பவங்கள் நடைபெற்று இன்று (நேற்று) வழக்கை அவர் வாபஸ் பெற்றுக் கொண்டார்.

அதற்கு ஈடாக நாங்கள் உச்ச நீதிமன்ற மேன்முறையீட்டு மனுவை கைவாங்குவதாக மன்றில் தெரிவித்தோம்.

இதன் அடிப்படையில் நீதிமன்றம் மன்றை அவமதித்தமை சம்பந்தமான வழக்கை கைவாங்க அனுமதியளித்தது." என்றார். (ம-3)

## விக்னேஸ்வரனுக்...

ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனகஈஸ்வரன், தமது கட்சிக்காரர்களும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை வாபஸ் பெறுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகக் கூறினார்.

இந்த இணக்கப்பாட்டுடன், சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் வட மாகாண சபையின் முன்னாள் அமைச்சர்களான அனந்தி சசிதரன் மற்றும் சிவநேசன் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை முடித்துக் கொள்வதாக மேன்முறையீட்டு நீதிபதிகள் குழாம் அறிவித்துள்ளது.

2018ஆம் ஆண்டு அப்போதைய வட மாகாண சபையின் மீன் வளத்துறை அமைச்சராக கடமையாற்றிய தம்மை அந்த அமைச்சு பதவியில் இருந்து நீக்கியமை சட்டவிரோதமானது என அறிவிக்குமாறு பா. டெனீஸ்வரன் இந்த மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,8)

## நம்பிக்கை...

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 45ஆவது அமர்வில் ஜெனிவா தீர்மானத்துக்கு பிரதான அனுசரணை வழங்கிய நாடுகள் இதனைத் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் தனது உரையில் இலங்கை குறித்து வெளியிட்ட கரிசனைகளை கருத்தில் எடுத்துள்ளோம் எனவும் அந்த நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

கனடா, ஜேர்மனி, பிரித்தானியா, வடக்கு மசெடோனியா மற்றும் மொன்டிநீக்ரோ ஆகிய நாடுகளின் சார்பில் உரையாற்றிய பிரிட்டனின் மனித உரிமை விவகாரங்களுக்கான தூதுவர் ரீட்டா பிரென்ஞ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த மார்ச் அமர்வில் இலங்கை தொடர்பாக மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையை பேரவை ஆராயும் என அவர் தெரிவித்துள்ளார்.

2015 ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மனித உரிமை பேரவை ஆராயும் என ரீட்டா பிரென்ஞ் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தீர்மானத்தின் மூலம் இலங்கை கடந்த கால காயங்களை ஆற்றுவதற்கும் மனித உரிமை ஆணையாளரினால் பதிவு செய்யப்பட்ட தீர்வுகாணப்படாத பாரிய உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு தீர்வை காண்பதற்குமான கருத்துடனபாட்டுடனான கட்டமைப்பை ஜெனிவா தீர்மானம் மூலம் மனித உரிமை பேரவை உருவாக்கியது என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட கட்டமைப்பு கருத்துடன்பாட்டுடனும் இலங்கையின் முழுமையான ஆதரவுடனும் பேரவையால் இரண்டு முறை புதுப்பிக்கப்பட்டது என ரீட்டா பிரென்ஞ் தெரிவித்துள்ளார்.

## பாட...

ஜனாதிபதி அலுவலக அதிகாரிகளின், பிரதமரின், பிரதமரின் அலுவலக அதிகாரிகளின் மற்றும் ஏனைய உயர் அரச அதிகாரிகளின் உத்தரவு என்று குறிப்பிட்டு பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளுமாறு அழுத்தங்களை பிரயோகிக்கும் வகையில் பாடசாலை அதிபர்களுக்கு பலர் கடிதங்களை அனுப்பி வைக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் அரச அதிகாரிகளும் கூட இவ்வாறான கடிதங்களை அனுப்பி வைக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

அதிபர்கள் தமது பாடசாலைக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும்போது அவ்வாறான எந்தவொரு கடிதத்தையும் அடிப்படையாக எடுக்கக் கூடாது. உரிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கமைவாக மாத்திரமே மாணவர்களை பாடசாலைகளுக்கு இணைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த ஒழுங்கு விதிகளை மீறுகின்ற அதிபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஜனாதிபதியின் செயலாளர் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். (ம-3)

## படுகாயமடைந்த...

முன்பு திருநெல்வேலிப் பகுதியில் நடந்து சென்று வீதியைக் கடந்தபோது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய செல்லையா சுந்தரலிங்கம் என்ற வயோதிபரே சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனாவின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)































# எண்ணெய் கப்பல் உரிமையாளரிடம் 340 மில்லியன் இழப்பீடு கோரிய இலங்கை

## பணம் முழுமையாக செலுத்தும் வரை கப்பலை வெளியேற்ற அனுமதிக்கப்படாது என தெரிவிப்பு

(கொழும்பு)

எம்டி நியூ டயமண்ட் எண்ணெய்க் கப்பலின் உரிமையாளர்களிடம் 340 மில்லியன் ரூபாய் பணத்தை இடைக்கால இழப்பீடாக சட்டமா அதிபர் கோரியுள்ளார்.

தீயை அணைத்தமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் இலங்கைக்கு இந்த கட்டணத்தை கப்பலின் உரிமையாளர்கள் இடைக்கால கொடுப்பனவாக செலுத்த வேண்டும்.இதற்கான எழுத்து மூலமான கோரிக்கை, கப்பல் உரிமையாளர்களின் சட்டத்தரணிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடல் சூழலுக்கு ஏற்பட்ட எண்ணெய்க் கசிவு குறித்து எந்த உரிமை கோரல்களும் செய்யப்படவில்லை.

கடல் சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆணையம் சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்து அதற்கான இழப்பீட்டு விபரம் சமர்ப்பிக்கப்படும்.

இழப்பீட்டுத் தொகைகள் முழுமையாக செலுத்தப்படும் வரை கப்பல் இலங்கை கடற்பரப்பை விட்டு வெளியேற அனுமதிக்கப்படாது என்று சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானிக்க அரசாங்க அதிகாரிகளுடனும், எண்ணெய் கப்பலின் பிரதிநிதிகளுடனும் பல சுற்று விவாதங்கள் நடத்தப்பட்டன.

தீ விபத்துக்குள்ளான 'எம்டி நியூ டயமண்ட்' கப்பல் தற்போது மட்டக்களப்புக்கு 45 கடல் மைல் தொலைவில் உள்ளது. என்ஜின் அறை வெடித்ததைத் தொடர்ந்து எண்ணெய் கப்பலில் இரண்டு தீ விபத்துக்கள் ஏற்பட்டன. (ம-03)

# சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடும் பணி இராணுவத்திடம்

(கொழும்பு)

சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடும் பணிகளை இராணுவம் பொறுப்பேற்றுள்ளது.

தலைமை சமிஞ்ஞை அதிகாரி, தகவல் தொழிநுட்ப பணிப்பாளர் மற்றும் ஏனைய தொழிநுட்ப அதிகாரிகளுடன் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடல் மற்றும் விநியோகித்தல் தொடர்பில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை விசேட கலந்துரையாடலொன்றை முன்னெடுத்துள்ளார்.

தற்போது சாரதி அனுமதிப்பத்திரத்தை அச்சிடும் தனியார் நிறுவனத்திடமிருந்து இராணுவத்தினரிடம் அதனை பொறுப்பளிக்க வேண்டும் என்று கடந்த ஜூலை முதலாம் திகதி அமைச்சரவையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எடுத்த தீர்மானத்துக்கமைய 2021 ஜனவரி முதலாம் திகதி முதல் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மேஜர் ஜெனரல் அதீப திலகரத்ன, பிரிகேடியர் அஷோக பீரிஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ம-03)

# ஒரு தொகை...

லிருந்து ஒருதொகை வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த வெடிபொருட்கள் இறுதி யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் மறைத்து வைக்கப்பட்ட வெடிபொருட்களாக இருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படுவதாக கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

கிழக்கு பிராந்திய கடற்படையினரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையின் போது, 3 பிளாஸ்டிக் பைகளில் வைக்கப்பட்டிருந்த TNTரக வெடிபொருள் 45 கிலோ கிராம், C 4 ரக வெடிபொருள் 5 கிலோ கிராம், 81 மில்லி மீற்றர் மோட்டார் குண்டுகள் 7, அடையாளம் காணப்படாத 15 fuse கள், 118 expelling charger, கிளைமோர் குண்டு ஒன்று, அடையாளம் காணப்படாத 8 கிலோ அளவுள்ள குண்டு மற்றும் மின்சார டெட்டனேட்டர் ஒன்று ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நிலையில், குறித்த வெடிபொருட்கள் மேலதிக பரிசோதனைகளுக்காக கடற்படையினரால் முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ம-03,06)

# வழிபாடு...

மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளையதினம் திருவிழா நிகழ்வுகள் நடைபெறவிருந்த நிலையில் அதனை தடுக்கும் விதமாக குற்றவியல் சட்டக் கோவையின் 106ஆவது பிரிவின் கீழ் தடைஉத்தரவு விண்ணப்பம் ஒன்றினை வவுனியா நீதிமன்றில் நெடுங்கேணி பொலிசார் கோரியிருந்தனர்.

நேற்றையதினம் இதனை ஆராய்ந்த நீதிபதி பொலிசாரால் கோரப்பட்ட குறித்த தடை உத்தரவு விண்ணப்பத்தை நிராகரித்ததுடன், திருவிழா நிகழ்வுகளை நடாத்துவதற்கு அனுமதி வழங்கியிருந்தார்.

குறித்த வழக்கில் ஆலயத்தின் நிர்வாகத்தினர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம் தலைமையில்10ற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03,299)


புவியியல் A+ இறுதிக் கருத்தரங்கு
காலம் :- 18.09.2020 (வெள்ளி) காலை 8.00 - 2.00 மணி வரை
முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்கள்
வெளி மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
வளவாளர் P.S.V தினேஸ் (M.Pil in Geography)
DCM$_N$ யாழ். நகர்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்) Tel : 077 011 9434
(3897)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK- 1025 /= Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம்
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-112)

விற்பனையில்.. புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் தரம் 4,5 மாணவர்களுக்கான, கடைசி நேர வெளியீடு
பூமாலை
எதிர்பார்க்கை வினாத்தாள்கள் தொகுப்பு
தேசிய ரீதியில் கற்பித்தலில் முன்னணி வகிக்கும் 12 ஆரம்பக்கல்வி ஆசிரியவளவாளர்களினால் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக பகுதி 1, பகுதி 2 உள்ளடங்களாக, 12 எதிர்பார்க்கை வினாத்தாள்கள் (ஒவ்வொரு வினாத்தாளும் 16 பக்கங்கள்), விடைகளுடன் கூடிய 60 பக்க விஷேட வர்ணக் கையேட்டுடன் தொகுக்கப்பட்டுள்ளது.


தனிப்பிரதி ரூ.650
உன்னது தேர்ச்சிக்கு உயர்வான வழிகாட்டி
வட இலங்கையில் கிடைக்குமிடங்கள்
- குயின்சி புத்தகசாலை (இல.271, K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
- பூபாலசிங்கம் புத்தகசாலை (பஸ் நிலையம், யாழ்ப்பாணம்)
- சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை (நெல்லியடி)
- சித்திவிநாயகர் புத்தகசாலை (சுன்னாகம்)
- வருணா புத்தகசாலை (கிளிநொச்சி)
- மஹாமாரி புத்தகசாலை (மல்லாவி)
- ஜோதி புத்தகசாலை (பெரிய கடை வீதி, மன்னார்)
- வவுனியாவில் அனைத்து புத்தசாலைகளிலும்
தொடர்புகளுக்கு: 077 - 625 8778
வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் இல. 10-1/5, முதலாம் மாடி, ஜிந்துப்பிட்டி வீதி, (No. 342, Trust Complex, Sea Street) கொழும்பு 13.
(C-337)

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)
(3825)

CIMS COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
Care Giver Course - பராமரிப்பாளர் பயிற்சி நெறி
- கனடாவில் / வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள
- படித்துக்கொண்டே 50'000/= சம்பளம் பெறலாம்.
- சனி, ஞாயிறு வகுப்புக்கள். (முழுநேர வேலைசெய்பவர்களும் படிக்கலாம்)
சிறுவர் பராமரிப்பு/ முதியோர் பராமரிப்பு/விசேட தேவையுள்ளோர் பராமரிப்பு/வீட்டு பராமரிப்பு


அரச அங்கீகாரம் பெற்ற எமது கற்கை நெறியானது அதிக செயன்முறைகளுடனும் (Practicals) பயிற்சிகளுடனும் (On the Job Training) கூடியதாக அமைவதால் எமது மாணவர்கள் மிக இலகுவாகவும் திருத்தமாகவும் வேலைகளை செய்யும் ஆற்றலை பெறுவார்கள். மேலும் எமது கற்கை நெறிகள் கனடாவின் Care Giver வேலை வாய்ப்பு மற்றும் குடிவரவு திட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டிருப்பதால் கனடா மற்றும் எந்தவொரு வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளக்கூடியதுடன் உள்நாட்டில் கூட சிறுவர் பராமரிப்பு மையங்கள், முதியோர் பராமரிப்பு மையங்கள், விசேட தேவையுள்ளோர் பராமரிப்பு மையங்கள் மற்றும் வீட்டு பராமரிப்பு போன்ற இடங்களில் உடனடி வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.
அனுமதிகளுக்கு 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம் 0777069777
(C-308)

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
A/L 2020 அனைத்துப் பிரிவு மாணவர்களுக்குமான...
மாபெரும் விசேட செயலமர்வு
8.30AM - 2.30PM
செப்ரம்பர் 19,20,21
ICT கணிதம்(7)
விவசாய விஞ்ஞானம் ஊடகக்கல்வி புவியியல்
- இம்முறை COVID - 19 தாக்கத்தால் இழந்த கல்வியை ஈடுசெய்யும் வகையில்
- அனைத்துப் பாடங்களுக்கும் இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
- பாடப்பரப்புக்கள் அனைத்தும் துரித மீட்டல் செய்யப்படும்.
- தனிப்பாட அனுமதிகளும் வழங்கப்படும்.
- சிரமமின்றி கையேடுகளைப் பெற்றுக்கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.
முற்பதிவுகளுக்கு:- 077 248 7774 / 021 221 7860
(C-338)

தொழில் வாய்ப்புடன் கூடிய ஹோட்டல் மனேச்மென்ட் கற்கைநெறி
படிக்கும் காலத்தில் மாதம் 10,000/= - 15, 000/= வருமானம், அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், சனி, ஞாயிறு காலை 9.00 a.m - 4.00 p.m. மணி வரை. இலவச ஆங்கில வகுப்புக்கள்.
076 057 9999, 021 314 6171
(C-339)

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்
- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
- ஆரம்ப சம்பளம் -15'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com
(C-112)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.